

வருடாந்த செயல்நிறைவேற்று மற்றும் கணக்கு அறிக்கை

-2022-

தலைப்பு - 269

மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

வருடாந்த செயல்நிறைவேற்று மற்றும் கணக்கு அறிக்கை - 2022

உள்ளடக்கம்			
விபரம்			பக்க இலக்கம்
01	நிறுவனத்தின் விபரம், நிறைவேற்றுப் பொழிப்பு		
	1.1	அறிமுகம்	01-02
	1.2	நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்	03
	1.3	மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்	04
	1.4	நிறுவன ஆளணி அமைப்பு விளக்கப்படம்	05
	1.5	அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், திணைக்களத்தின் பிரதான பிரிவுகள், மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்	06
	1.6	அமைச்சு, திணைக்களங்கள், மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள், நிதியங்கள்	07
	1.7	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)	
02	முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்		
	2.1	சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்	08-11
03	31.12.2022ல் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை		
	3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	12
	3.2	நிதி நிலமைக் கூற்று	13
	3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	14
	3.4	நிதிக்கூற்றுக் குறிப்புகள்	15-30
	3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	31
	3.6	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	32
	3.7	நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுகள், திணைக்களங்களின் முகவர்,மாவட்டச் செயலகம், மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு	33-39
	3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை	40
	3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	41-72
04	செயலாற்றுகைச் சுட்டிகள்		
	4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)	73
05	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை		
	5.1	அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டல்.	74-78
	5.2	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்	78



	உள்ளடக்கம்		
	விபரம்		பக்க இலக்கம்
06	மனிதவள விபரம்		
	6.1	பதவியணி முகாமைத்துவம்	79
	6.2	நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்திய மனித வளங்களின் மிகை அல்லது குறை எவ்வாறானது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுதல்	
	6.3	மனித வள அபிவிருத்தி	80
07	இணக்கப்பாட்டு அறிக்கை		81-86

அத்தியாயம் 01

1.1 அறிமுகம்

அரசாங்க அதிபரின் செய்தி



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால், 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை, சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வறிக்கையானது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதி முகாமை மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் அடிப்படையில், 02/2020 ஆம் இலக்க 28.08.2020 ஆம் திகதிய அரச நிதி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான, மாவட்ட மற்றும் பிரதேச மட்ட தகவல்களை ஒன்றுதிரட்டி, அடையப்பட்ட சாதனைகள் மற்றும் எதிர்கொள்ளப்பட்ட சவால்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகமானது, 14 பிரதேச செயலகங்கள் மற்றும் 345 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குமுரிய, மாவட்ட நிர்வாக மையமாகக் காணப்படுகின்றது. மாவட்ட செயலகத்தினால் மத்திய அரசு மற்றும் கிழக்கு மாகாண சபையின், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றும் பல்வேறு பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் பயனுறுதிவாய்ந்த செயலாற்றுகை (Effective performance) மேற்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு, மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய பொருளாதாரப் பாதையை மாற்றுவற்கான அடிப்படை அடித்தளத்தை தயாரிப்பதற்காக, ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ எனும் தேசிய கொள்கைத் திட்டத்திற்கேற்ப, உத்தியோகத்தர்களது அனுபவத்தினைக்கொண்டு மாவட்ட செயலகத்தினால், பல்துறைசார் அபிவிருத்தி செயற்திட்டங்கள், மற்றும் சமுக நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

‘‘உலகத்துடன் ஒன்றிணைந்து முன்னோக்கி செல்லக்கூடிய வலுவான பொருளாதாரத்துடன் கூடிய அறிவுள்ள சமுகத்தை உருவாக்குவோம்’’ என்ற அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கூற்றுக்கமைவாக நாம் எமது சேவைகளையாற்றுகின்றோம்.

மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக, அரசாங்கத்தின் அரசியல் பிரதிநிதிகளால் வழங்கப்படும் பேராதரவிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாவட்டத்தில், சமூகப் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு குழுவாக ஒன்றிணைந்து, அயராதுழைத்த மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மற்றும் உள்ளூர் திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. கலாமதி பத்மராஜா,
மாவட்ட செயலாளரும் / அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.

மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்

மாவட்டத்தின் பெயர் மட்டக்களப்பு நகரத்தின் பெயரைக்கொண்டு மட்டக்களப்பு மாவட்டம் என அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நகரமானது ஆரம்பத்தில் புளியந்தீவு எனும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு என்பது மட்டி களப்பு (Muddy land), அதாவது சேற்று நிலமுடைய (wet land) களப்புப் பாங்கான பிரதேசம் எனப் பொருள்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விஸ்தீரணமானது 2854 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன், கிழக்கு கடற்கரையிலிருந்து 130 கிலோ மீற்றரிலும், தெற்கில் துறைநீலாவணை தொடக்கம், வடக்கில் வெருகல் ஆறு வரை பரந்து காணப்படுகின்றது.

வைத்தியர் சீ.ஏ. கிரிகன் பக் சார்ஜன்ட் அவர்கள் மட்டக்களப்பு தொடர்பாக கூறும்போது, மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவானது, கடலிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் கடலோடு இணையும் மத்திய பகுதியில் அமைந்துள்ளதாகவும், பிரதான நிலப்பரப்பிலிருந்து தெற்கு மற்றும் மேற்கு நீர்ப்பரப்பால் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இம்மாவட்டத்தின் பெரும்பாலான நிலப்பரப்பு சதுப்பு நிலமாகக் காணப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது மிகவும் உயரமாகவும், 10 மைல்கள் வரை வயற்காணிகளினால் சூழப்பட்டுள்ளதாகவும் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவ்வேளையில் பிரபல்யமல்லாத சிறிய தீவுகளில் ஒன்றான "போன்" தீவில் அப்போதைய உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. போன் அவர்களுக்கு பங்களா ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் கோட்டைக்கு முன்பாக உள்ள வாவியின் ஆழப்பகுதியிலிருந்து பல்வேறு இனிமையான இசை ஒலி காற்றில்லாத வேளைகளிலும் பௌர்ணமி நாட்களிலும் கேட்பதாக நம்பப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டம், இயற்கையாகத் தேன் கிடைக்கக்கூடிய வனப்பிரதேசங்களைக் கொண்டுள்ளதாலும், வாவியில் மீன் பாடுவதனாலும் "மீன்பாடும் தேனாடு" என்று அழைக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நகரம் 1622 ஆம் ஆண்டு, போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்டதுடன், 1639 ஆம் ஆண்டில் ஒல்லாந்தராலும், 1796 ஆம் ஆண்டில் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பில், 1870 ஆம் ஆண்டு பிரதான அரசாங்க அதிபர் அலுவலகம் நிறுவப்பட்டது. இதற்கு முன்னர், அரசாங்க அதிபர் அலுவலகம், திருகோணமலையில் உப அலுவலகமாகக் காணப்பட்டது. மட்டக்களப்பின் முதல் அரசாங்க அதிபராக திரு. ஆர்.டபிள்யூ.ரி. மொரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

மாவட்டத்தின் இயற்கை வளங்கள்

- மட்டக்களப்பு மாவட்டம் கரையோர மாவட்டமாகக் காணப்படுகின்றமையால், கடல் வளம் பிரதான வளமாக காணப்படுகின்றது. மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களில், 08 பிரதேச செயலகங்களின் 76 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஏறக்குறைய 130 கிலோ மீற்றர் நீளமான பகுதிகள் கரையோரத்திலேயே காணப்படுகின்றது. மட்டக்களப்பு வாழ் மக்களின் முக்கிய ஜீவனோபாயங்களில் ஒன்றாக உவர் நீர் மீன்பிடித்தொழில் காணப்படுகின்றது.
- மாவட்டத்தின் பெயருக்குரியவாறு, துறைநீலாவணை தொடக்கம் வாழைச்சேனை வரை உள்ளக நீரினை கொண்ட 229.19 சதுர கிலோமீற்றர் பரப்புடைய மிக நீண்ட களப்பு காணப்படுவதுடன், இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 8.70% வீதமாகும். களப்பினை அண்டிய கிராமப் பகுதிகளில் வாழும் மக்களில் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர் அதிகமாக காணப்படுகின்ற போதிலும் துறைநீலாவணை, களுதாவளை மற்றும் குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் களப்புப் பகுதி வேளாண்மை பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.
- புராதன காலத்தில் இது ஒரு துறைமுகப்பட்டணமாக காணப்பட்டுள்ளதுடன், இதன் போது பயன்படுத்தப்பட்ட பாரந்தூக்கும் இயந்திரங்கள் தற்போதும் சுங்க வீதியில் காந்திப்பூங்கா வாவியோரமாக காணப்படுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது..
- பாசிக்குடா கடற்கரை அலையற்ற பிரபல்யம் வாய்ந்த கடற்பகுதியாக காணப்படுவதுடன், இது இலங்கையில் காணப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்த முக்கிய சுற்றுலாத்தலமாகவும் காணப்படுகின்றது.
- மட்டக்களப்பு மாவட்டத்தின், பிரதான வருமானம் ஈட்டும் துறையான நெற் பயிற்செய்கைக்கு உகந்த வண்டல் மண் தொகுதி, மாவட்டத்தின் மேற்கு பகுதியில் காணப்படுகின்றது. இது மாவட்டத்தின் உணவு தன்னிறைவுக்கும், அரிசி உற்பத்தி செய்யும் பிரதான மாவட்டங்களில் ஒன்றாகத் திகழ்வதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்களது பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் மீன்பிடி காணப்படுகின்றது.

1.2 மாவட்ட செயலகத்தின் தூர நோக்கு, குறிக்கோள், நோக்கம்.

தூர நோக்கு

"இலங்கையில் ஒரு முன்னணி பொதுச்சேவை நிறுவனமாக திகழ்தல்"

குறிக்கோள்

"மட்டக்களப்பு மாவட்ட மக்களின் உன்னத வாழ்விற்காக, அனைத்து துறைகளினதும் ஒருங்கிணைவு மற்றும் மக்கள் பங்களிப்புடன், அரச கொள்கைகளை நிலைபேறான அபிவிருத்திச் செயன்முறையினூடாக அமுல்படுத்துவதன் மூலம், வினைத்திறனான பொதுச் சேவையினை வழங்குதல்"


நோக்கம்

- அரசாங்க கொள்கைகளை, திறம்பட அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- பொதுச்சேவையை, வெளிப்படையானதும் பக்கச்சார்பற்றதும் பொறுப்புணர்வுடையதுமாக ஸ்தாபித்தல்
- சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களை மேம்படுத்தலும், பாதுகாத்தலும்.
- நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைமைகளை வழங்கலின் ஊடாக சேவையின் தரத்தினை மேம்படுத்தல்
- நியாயமானதும் பக்கச்சார்பற்றதுமான அணுகுமுறைகளில் கவனம் செலுத்தி மக்களின் வாழ்க்கை முறையினை மேம்படுத்துவதற்கான பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்தல்.
- நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்துருவாக்கத்தின் ஊடாக சேவையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- இயற்கை வளங்களை நிர்வகித்தல் மற்றும் நிலைபேறான விவசாய நடவடிக்கைகளை உருவாக்குதல்
- இடர் மற்றும் பேரிடர்களை முகாமை செய்வதற்கான முன் திட்டமிடல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்.
- தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- திருமணம் மற்றும் பிறப்பு, இறப்பு போன்றவற்றையும் அசையும், அசையா சொத்துக்களையும் பதிவு செய்வதன் ஊடாக பொது மக்கள் தங்கள் உரிமைகளை பாதுகாக்க உதவுதல்.

1.3 மாவட்ட செயலகத்தின் முக்கிய செயற்பாடுகள்

1. மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்
2. மாவட்ட நிருவாகத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பும் முகாமையும்
3. மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் கண்காணித்தலும்
4. தேர்தல் தொடர்பான அனைத்து கடமைகளையும் மேற்கொள்ளுதல்
5. துப்பாக்கி மற்றும் வெடி பொருட்கள் தொடர்பான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்.
6. குறுகிய கால நடுத்தர கால அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
7. சமுர்த்தி போன்ற வறுமை ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
8. விளையாட்டு, கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தல்
9. மாவட்டத்தில் நுகர்வோர் உரிமைகமைகளை சந்தை புலனாய்வு மற்றும் நுகர்வோர் பலப்படுத்தல் ஊடாக பாதுகாத்தல்
10. மாவட்டத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வசதி செய்தல்.
11. மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும்.
12. திருமணம் மற்றும் பிறப்பு, இறப்பு போன்றவற்றையும் அசையும், அசையா சொத்துக்களையும் பதிவு செய்வதன் ஊடாக பொது மக்கள் தங்கள் உரிமைகளை பாதுகாக்க உதவுதல்.


1.4 நிறுவன அமைப்பு வரைபடம்



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், திணைக்களத்தின் பிர-தான பிரிவுகள், மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்

இல	பிரதேச செயலகங்கள்	கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்	கிராமங்கள்
1	காத்தான்குடி	18	25
2	ஏறாவூர்பற்று	39	204
3	ஏறாவூர் நகரம்	15	60
4	மண்முனை தென் எருவில் பற்று	45	59
5	மண்முனை வடக்கு	48	121
6	கோறளைப்பற்று மேற்கு	08	30
7	கோறளைப்பற்று	12	31
8	மண்முனை மேற்கு	24	114
9	கோறளைப்பற்று வடக்கு	16	47
10	மண்முனைப்பற்று	27	51
11	மண்முனை தென்மேற்கு	24	90
12	போரதீவு பற்று	43	112
13	கோறளைப்பற்று தெற்கு	18	76
14	கோறளைப்பற்று மத்தி	08	16
	மொத்தம்	**345**	**1,036**

மாவட்ட நிருவாக வரைபடம்



1.6 மாவட்ட செயலகத்திற்கான நிதி மூலங்கள்

மாவட்ட செயலகத்திற்கான நிதியானது அரச வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக உருவாக்கப்படும் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

1.7 மாவட்ட செயலகத்திற்கான வெளிநாட்டு நிதி மூலத்தின் விபரங்கள்

1. 2022ம் ஆண்டில் வெளிநாட்டு நிதி மூலத்தின் ஊடாக மாவட்டச் செயலகத்திற்கு. உலக உணவுத்திட்டத்தின் மூலம் மண்முனை மேற்கு, மண்முனை தென் மேற்கு, ஏறாவூர்பற்று கோறளைபற்று தெற்கு, பிரதேச செயலகங்களில் வருமானம் குறைந்தோருக்கான வாழ்வாதாரத் திட்டம் ரூபா **31,227,099.51** மில்லியன் செலவில் அமுல்படுத்தப்பட்டது.

2. பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் முன்பள்ளி ஆரம்ப பாடசாலைகளுக்கு UNICEF நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 28,924,500 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

3. மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ்

    - இரட்டையர்களுக்கான கொடுப்பனவுத் திட்டம் ரூபா 22,500.00 செலவில் ஏறாவூர் நகர் மற்றும் போரதீவுப் பற்று பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்பட்டது

    - பாடசாலை உபகரணங்கள் மற்றும் வள இருப்புக்களை பராமரித்தலுக்கான (Maintenance of School equipment resource reserves) கொடுப்பனவுத் திட்டம் ரூபா Rs. 20,000.00 செலவில் மாவட்ட செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டது.

    - பாடசாலை சிறார்களுக்கான பாதுகாப்புக் குழுக்களை நிலைநாட்டுதல் மற்றும் பலப்படுத்துவலுக்கான (Establish & Strengthening the school child security committees) கொடுப்பனவுத் திட்டம் ரூபா 89,980.00 செலவில் கோறளை பற்று வடக்கு, கோறளை பற்று, மண்முனை வடக்கு, மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப் பற்று பிரதேச செயலகங்களிலும் மற்றும் மாவட்ட செயலகத்தினாலும் அமுல்படுத்தப்பட்டது.

அத்தியாயம் 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்

1. கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் கீழ், 1,314 வாழ்வாதார உதவிகள் வழங்கியதன் மூலம், 29,450 குடும்பங்களின் வருமானம் 10 தொடக்கம் 15 வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளதுடன் அவர்களது வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது. இதில் மீன்பிடி அபிவிருத்திக்காக 177 ஆற்று மற்றும் கடல் தோணிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், கிராமிய ஆடுவளர்ப்புத் திட்டத்தின் கீழ் 390 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

2. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, 24,000 வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு சுய உணவுப்பாதுகாப்பு தன்நிறைவுக் குடும்பங்களாக முன்னேற்றப்பட்டுள்ளது.

3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 18 குளங்கள் "நீர்ப்பாசன செழுமை" மற்றும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

4. முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் போசாக்கினை மேம்படுத்துவதற்காக, 250 முன்பள்ளி பாடசாலைகளில் 7,200 முன்பள்ளி மாணவர்களுக்கு UNICEF நிறுவனத்தின் பங்களிப்புடன் காலை உணவு வழங்கப்பட்டுள்ளது.

5. உணவு உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு உலக உணவுத்திட்டத்தின் கீழ், நன்னீர் மீன்பிடியை முன்னேற்றும் பொருட்டு நலிவடைந்த குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டது. 60 பயனாளிகளுக்கு ஆட்டுக் கொட்டகைகளும், 80 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பிற்கான உதவிகளும், 7 பயனாளிகளுக்கு மாட்டுக் கொட்டகைகளும், 27 பயனாளிகளுக்கு சுழல் (spiringler) நீர்பாசன உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

6. "ஹரித தயக" வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 255 நாற்றுமேடையாளர்களுக்கு பயிற்சியும், விதைகளும் வழங்கப்பட்டு, அவர்களால் 1,693,900 நாற்றுக்கன்றுகள் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டது.

7. 30 சமுர்த்தி வங்கிகள் கணனிமயப்படுத்தப்பட்டு வினைத்திறனான சேவையை வழங்கிவருகின்றது

8. "சௌபாக்கியா" வீட்டுத்திட்ட அபிவிருத்தியின் கீழ் 84 பயனாளிகளிற்கு பகுதியளவு பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளும், 41 பயனாளிகளிற்கு புதிய வீடுகளும் அமைப்பதற்குரிய நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

9. மாற்றுத்திறனாளிகளுக்கான, சமுதாய மட்ட புனர்வாழ்வு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐந்து பிரதேச செயலகங்கள் மாவட்ட மட்ட போட்டியிலிருந்து தேசிய மட்ட போட்டியில் பங்குபெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

10. மட்டக்களப்பு மாவட்டத்தில், 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் விருது போட்டிக்காக 49 நிறுவனங்களால் விண்ணப்பம் அனுப்பப்பட்டு 42 நிறுவனங்கள் (விண்ணப்பம் செய்த நிறுவனங்களில் 85.7%) வெற்றியீட்டியுள்ளது.

11. 180 பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. போதைக்கு அடிமையான 23 நபர்கள் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 39 நபர்கள் புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். போதைக்கு அடிமையான 151 நபர்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

12. மாவட்ட தொழில் சந்தை மூலம் தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குனர்களையும் ஒருங்கிணைத்ததுடன் 26 இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

13. மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் **சம்பியன்** பட்டம் பெற்றுள்ளது.

14. விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்தவர்கள், மாவட்டச் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "***வர்ண விருது***" நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்கள்.

15. 7 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்பட்டு பொலிஸ் மற்றும் முப்படையினரிடம் வினைத்திறனான பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டது.

16. நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியினை நிவர்த்தி செய்யும் முகமாக மாவட்ட மட்டத்தில் "Fuel Pass digital system" இனை அறிமுகப்படுத்தியதன் மூலம் எரிபொருள் விநியோகம் சிறந்த முறையில் முகாமை செய்யப்பட்டது.

17. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினை நிவர்த்தி செய்யும் முகமாக இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற 12,817 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 21.33 மெற்றிக் தொன் பால்மா என்பவை மிகவும் வறிய மக்களுக்கு வழங்கப்பட்டது.

18. மட்டக்களப்பு மாவட்டத்தில் **2,147** பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளதுடன் அவர்களில் 484 பட்டதாரிகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

19. அரசாங்கத்தின் 100,000 மரநடுகைத் திட்டத்தின் கீழ் 40,000 மரக்கன்றுகள் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நடப்பட்டுள்ளது.

20. 471 எண்ணிக்கையான காணிப் பிணக்குகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், 3,277 காணி அனுமதிப்பத்திரங்களும், 1,283 காணி அளிப்புப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்நோக்கிய சவால்கள்

1. கொவிட் - 19 எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, ஒதுக்கீடுகளை குறைப்பது மற்றும் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக நிதி அமைச்சினால் **03/2022** ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. இதன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பெரும்பாலான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியவில்லை.

2. மட்டக்களப்பு மாவட்டத்தில், போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கான மத்திய நிலையம் காணப்படாமையினால், போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றது.

3. தொழில்முனைவோர் உருவாக்கத்திற்குரிய தொழில்நுட்ப வசதி மற்றும் மூலதனப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றது.

4. மாவட்டத்தின் விளைபொருட்களிற்கு பெறுமதிசேர் தொழில்நுட்பச்செயன்முறை இல்லாது காணப்படுவதனால் வருமான அதிகரிப்பினை ஏற்படுத்த முடியாதுள்ளது.

5. மாவட்டத்தின், மொத்த பயிர்ச்செய்கை நிலங்களில் 2/3 பகுதி மழை வீழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு பயிர்ச்செய்கை செய்யப்படுவதனால் உற்பத்தி விளை திறனை உச்ச அளவில் பேணமுடியாதுள்ளது

6. பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை வைத்து செய்யப்படும் கைத்தொழில்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொள்கின்றன. உதாரணம் - கைத்தறி தொழில்துறை

எதிர்கால இலக்குகள்

1. உள்ளூர் வளங்களை பயன்படுத்தி உள்ளூர் உற்பத்தியினை அதிகரிப்பதனூடாக இறக்குமதி நுகர்வுக் கலாச்சாரத்தைக் குறைத்தல்.

2. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்தியினை 10% ஆல் அதிகரிப்பதனூடாக நாட்டின் இறக்குமதி செலவுகளை குறைப்பதில் பங்களிப்புச் செய்தல்.

3. கிராமங்களில் உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தும்முகமாக அரச, அரச சார்பற்ற, தனியார் மற்றும் ஏனைய தரப்பினர்களினது பங்குபற்றுதலுடன் முழுமையான விரிவான திட்டத்தினூடாக மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களின் எண்ணிக்கையை 50% ஆல் குறைத்தல்.

4. பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசனை இன்மையினை கடந்த ஆண்டினைவிட 20%ஆல் குறைத்தல்.

5. மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இளம் தொழில் முனைவோரை ஊக்குவித்து 1500 புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

6. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து அரச, தனியார் நிறுவனங்களிலும் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை 80% ஆல் அதிகரிப்பதன் ஊடாக நிறுவன இலக்கினை அடைவதற்கு உறுதுணையாக இருத்தல்.

7. போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் செயற்பாடு தொடர்பான, நிறுவனக்கட்டமைப்பு மற்றும் சமூக மட்ட அமைப்புக்களை பலப்படுத்தல்.

8. மத்திய அரசின், விளையாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நிகழ்சித்திட்டமான ***"Talent Identification (TID)"*** ஊடாக வீர, வீராங்கனைகளை தெரிவு செய்து பயிற்சியளித்தல் மற்றும் கிராம மட்டத்திலுள்ள வீர, வீராங்கனைகளை நகர மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறவைத்தல்.

9. தகவல் தொடர்பாடல் முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரச நிர்வாக சேவையினை வினைத்திறனுடையதாக செயற்படுத்தல்.

10. 4,240 காணி அனுமதிப்பத்திரங்களையும், 1,397 அளிப்புப் பத்திரங்களையும் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.

MRS. KALAMATHY PATHMARAJAH
District Secretary / Government Agent
Batticaloa District

அத்தியாயம் 03 — 31.12.2021 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ACA-F

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திணைக்களம்:	மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
தலைப்பு	269

(ரூபா)

பாதீடு 2022		குறிப்பு	உண்மை நிலை திருத்தப்பட்ட 2022	2021	
-	**வருமானப் பெறுகைகள்**				
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானம் பெறுகைகள்**				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		3,312,231,877	4,499,034,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		405,302,603	315,518,130	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		45,932,672	38,698,425	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**3,763,467,153**	**4,853,250,555**	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**3,763,467,153**	**4,853,250,555**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		70,000,000	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**3,693,467,153**	**4,853,250,555**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**				
853,650,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	843,950,721	692,029,637	
126,658,570	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	120,083,536	99,398,397	ஏசீஏ-2(ii)
2,691,430	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	2,654,719	594,459,966	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
983,000,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**966,688,976**	**1,385,888,000**	
	மூலதனம் செலவினம்				
20,700,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	20,173,387	12,188,762	
210,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	108,606,673	130,153,516	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,300,000	மனித வள அபிவிருத்தி	14	1,085,381	2,000,000	
663,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	546,998,478	37,832,914	
895,000,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**676,863,919**	**182,175,192**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		416,707,987	354,100,703	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		41,159,011	47,297,963	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**457,866,998**	**401,398,665**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+ எ+ ஏ)		**2,101,419,894**	**1,969,461,857**	
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான மீதி ஒ = (உ-ஐ)**		**1,592,047,259**	**2,883,788,698**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**1,592,047,259**	**2,883,788,698**	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

திணைக்களம்	மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
தலைப்பு	269

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	2,643,090,762	2,527,862,814
		-	-
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	146,945,572	151,719,233
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**2,790,036,333**	**2,679,582,048**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		58,837,650	52,205,928
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்	ஏசீஏ-6	2,643,090,762	2,527,862,814
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக் கணக்குகள்	ஏசீஏ-4	88,107,922	99,513,306
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**2,790,036,333**	**2,679,582,048**

பக்க இலக்கம் 06 முதல் 25 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் இணைப்புகளின் பக்க இலக்கம் 26 முதல் 36 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் இணைப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

திருமதி.க.பத்மராஜா
கணக்கீட்டு உத்தியோகத்தர்
மாவட்டச் செயலாளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

திரு.நீல் பண்டார ஹபுஹின்ன
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
2023.02.20

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

MRS. KALAMATHY PATHMARAJAH
District Secretary / Government Agent
Batticaloa District.

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affair
Provincial Councils & Local Government
Home Affairs Division

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று

ACA-C

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

தலைப்பு: 269

	உண்மை	
		திருத்தப்பட்ட
	2022	2021
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	65,872,330	55,286,389
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	196,936,569	145,237,190
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	3,312,231,877	4,499,034,000
முற்பணங்களை அறவிடல்	-	-
வைப்புக்களின் பெறுகை	405,302,603	315,518,130
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**3,980,343,380**	**5,015,075,709**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுடுக் கொடுப்பனவுகள்	840,550,726	691,489,787
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	122,738,255	693,858,363
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,784,315,212	3,017,916,779
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	70,000,000	-
முற்பணக் கொடுப்பனவு	69,167,280	75,534,886
வைப்புக் கொடுப்பனவு	416,707,987	354,100,703
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**3,303,479,461**	**4,832,900,517**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**676,863,919**	**182,175,192**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	676,863,919	182,175,192
ஏனைய பேரேட்டு மூலதனச் செலவீனம்	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**676,863,919**	**182,175,192**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(676,863,919)**	**(182,175,192)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ + ஊ)	**0**	**0**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)	**0**	**0**
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

ஏசீஏ - 1

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

செலவின தலைப்பு: 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பு	வருமான மதிப்பீடு (1)		வருமானத்தைத் திரட்டுதல் (2)			(3)	வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் (4)			(5)
		மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது	ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table 66/SA-21)	மொத்தம்	நிலுவை வருமானங்களை திரட்டுதல்	காசாக	தவறுகளைத் திருத்துதல்	மொத்தம்	தேறிய வருமானம்
		1(i)	1(ii)	2(i)	2(ii)	2(iii)=2(i)+2(ii)	(3)	4(i)	4(ii)	4(iii)=4(i)+4(ii)	5=2(iii)+(3)-4(iii)
		இல்லை									

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

திருமதி.க..பத்மராஜா
கணக்கீட்டு உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

MRS. KALAMATHY PATHMARAJAH
District Secretary / Government Agent
Batticaloa District.

ஏசீஏ-2(II)

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	ஏற்பாடுகள்					செலவினம்			தேறிய வினைவு		
		நிதியிடல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 215 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (நிறைசேமியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மீண்டுவரும் செலவினம்												
நிகழ்ச்சித் திட்டம் (I)												
நிகழ்ச்சித் திட்டம்/கருத்திட்டம்/உப கருத்திட்டம்/ குறியீடு												
கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு	5											
ஆளுக்குரிய பிரதானங்கள்												
1001 சம்பளமும் கூலியும்		11	567,000,000	-	-	567,000,000	559,001,116	-	559,001,116	7,998,884	1.41	5% திற்கு குறைவு
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்		11	21,300,000	-	-	21,300,000	21,244,578	-	21,244,578	55,422	0.26	5% திற்கு குறைவு
1003 ஏனைய கொடுப்பனவுகள்		11	265,350,000	-	-	265,350,000	260,305,033	3,399,995	263,705,028	1,644,972	0.62	5% திற்கு குறைவு
மொத்தம்			853,650,000	-	-	853,650,000	840,550,726	3,399,995	843,950,721	9,699,279	1.14	
செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6											
பிரயாணச் செலவினம்												
1101 உள்நாடு		11	8,500,000	-	(1,039,088)	7,460,912	6,550,231	-	6,550,231	910,681	12.21	பொருளாதார நெருக்கடி காரணமாக களப்பணி மட்டுப்படுத்தப்பட்டது
மொத்தம் (அ)			8,500,000	-	(1,039,088)	7,460,912	6,550,231	-	6,550,231	910,681	12.21	
வழங்கல்கள்												
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்		11	11,000,000	-	3,861,520	14,861,520	14,838,801	-	14,838,801	22,719	0.15	5% திற்கு குறைவு
1202 - எரிபொருள்		11	24,400,000	-	1,800,000	26,200,000	26,199,994	-	26,199,994	6	0.00	5% திற்கு குறைவு
1203 உணவும் சீருடைகளும்		11	650,000	-	(202,000)	448,000	448,000	-	448,000	0	0.00	5% திற்கு குறைவு
மொத்தம் (ஆ)			36,050,000	-	5,459,520	41,509,520	41,486,795	-	41,486,795	22,725	0.05	
பராமரிப்புச் செலவினங்கள்												
1301 வாகனங்கள்		11	20,000,000	-	-	20,000,000	19,031,559	-	19,031,559	968,441	4.84	5% திற்கு குறைவு
1302 பொறி, இயந்திரம், உபகரணம்		11	3,000,000	-	700,000	3,700,000	3,695,341	-	3,695,341	4,659	0.13	5% திற்கு குறைவு
1303 கட்டடங்களும் கட்டமைப்புக்களும்		11	11,500,000	-	-	11,500,000	10,042,384	-	10,042,384	1,457,616	12.67	3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டன.
மொத்தம் (இ)			34,500,000	-	700,000	35,200,000	32,769,284	-	32,769,284	2,430,716	6.91	
சேவைகள்												
1401 போக்குவரத்து		11	800,000	-	(741,080)	58,920	14,050	-	14,050	44,870	76.15	தேவை ஏற்படாமை
1402 தபால், தொலைத்தொடர்பு		11	10,000,000	-	750,000	10,750,000	10,334,428	-	10,334,428	415,572	3.87	5% திற்கு குறைவு
1403 மின்சாரமும் நீரும்		11	15,500,000	-	(4,050,000)	11,450,000	8,704,964	-	8,704,964	2,745,036	23.97	மின்தடை மற்றும் 3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டமை.
1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்		11	800,000	-	(370,782)	429,218	429,217	-	429,217	1	0.00	5% திற்கு குறைவு
1409 ஏனையவை		11	19,000,000	-	800,000	19,800,000	19,794,566	-	19,794,566	5,434	0.03	5% திற்கு குறைவு
மொத்தம் (ஈ)			46,100,000	-	(3,611,862)	42,488,138	39,277,225	-	39,277,225	3,210,913	7.56	
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)			125,150,000	-	1,508,570	126,658,570	120,083,536	-	120,083,536	6,575,034	5.19	
செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்	7											
மாற்றங்கள்												
1506 அரசாங்க அமைப்புகளுக்கான உட்கை மட்ட மாற்று		11	4,200,000	-	(1,649,650)	2,550,350	2,513,639	-	2,513,639	36,711	1.44	5% திற்கு குறைவு
செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம்	9											
1701 - நட்டங்களும் பதிலீடும் நிகழத்தக்க சேவைகள்		11	-	-	141,080	141,080	141,080	-	141,080	0	0.00	5% திற்கு குறைவு
			4,200,000	-	(1,508,570)	2,691,430	2,654,719	-	2,654,719	36,711	1.36	
நிகழ்ச்சித் திட்டம் (I)												

செலவின தலைப்பு இல 1269

[illegible] மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	ஏற்பாடுகள்					செலவினம்			தேறிய வினைவு		
		நிதியிடல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
லதனம் செலவினம்												
கழ்ச்சித் திட்டம் (1)												
பாது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு												
லதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மம்படுத்தலும்	10											
001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		11	9,700,000	-	-	9,700,000	9,697,606	-	9,697,606	2,394	0.02	5% ற்கு குறைவு
002 பொறி, இயந்திரம், உபகரணம்		11	5,000,000	-	-	5,000,000	4,830,715	-	4,830,715	169,285	3.39	5% ற்கு குறைவு
003 வாகனங்கள்		11	6,000,000	-	-	6,000,000	5,645,066	-	5,645,066	354,934	5.92	3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டன.
மாத்தம் (அ)			**20,700,000**	-	-	**20,700,000**	**20,173,387**	-	**20,173,387**	**526,613**	**2.54**	
லதனச் சொத்துக்களின் கொள்வனவு	11											
102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்		11	5,000,000	-	-	5,000,000	5,000,000	-	5,000,000	0	0.00	5% ற்கு குறைவு
103 பொறி, இயந்திரம், உபகரணம்		11	5,000,000	-	-	5,000,000	4,998,920	-	4,998,920	1,080	0.02	5% ற்கு குறைவு
104 -புதிய மாவட்ட செயலக கட்டடம்		11	200,000,000	-	-	200,000,000	98,607,753	-	98,607,753	101,392,247	50.70	போதிய கட்டுநிதி கிடைக்கப்பெறாமை மற்றும் 3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டமை.
மாத்தம் (ஆ)			**210,000,000**	-	-	**210,000,000**	**108,606,673**	-	**108,606,673**	**101,393,327**	**48.28**	
னித வள அபிவிருத்தி	14									**214,619**	**16.51**	
401 பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்		11	1,300,000	-	-	1,300,000	1,085,381	-	1,085,381	214,619	16.51	3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் பயிற்சி நெறிகள் கட்டுப்படுத்தப்பட்டன.
மாத்தம் (உ)			**1,300,000**	-		**1,300,000**	**1,085,381**	-	**1,085,381**	**214,619**	**16.51**	
னைய மூலதனச் செலவினங்கள்	15											
509 (068) - கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்கள்			275,000,000	-	-	275,000,000	274,220,330	-	274,220,330	779,670	0.28	5% ற்கு குறைவு
509 (069) - உள்ளூராட்சி அதிகாரசபை வட்டார பிவிருத்தி			241,000,000	-	-	241,000,000	186,134,063	-	186,134,063	54,865,937	22.77	3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டன.
509 (070) - பரவலாக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம்			75,000,000	-	-	75,000,000	14,926,578	-	14,926,578	60,073,422	80.10	3/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டன.
509 (071) - கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி			72,000,000	-	-	72,000,000	71,717,506	-	71,717,506	282,494	0.39	5% ற்கு குறைவு
மாத்தம் (ஊ)			**663,000,000**	-	-	**663,000,000**	**546,998,478**	-	**546,998,478**	**116,001,523**	**17.50**	
கழ்ச்சித் திட்டம் (1)												
பாது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)			**895,000,000**	-	-	**895,000,000**	**676,863,919**	-	**676,863,919**	**218,136,081**	**24.37**	
ழு மொத்தம் (குறிப்பு 5 - 15)			**1,878,000,000**	-	-	**1,878,000,000**	**1,640,152,900**	**3,399,995**	**1,643,552,895**	**234,447,105**	**12.48**	

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

ACA - 3

ஏசீஏ-3

2022 ஆண்டிற்கான பணி முற்பணக் கணக்கின் அறிக்கை

செலவின தலைப்பு இல :269

திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

ரூபா

முற்பணக் கணக்கு இலக்கம்	2022 சனவரி 1 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி			கிடைக்கப்பெற்ற பணிமுற்பணம்			தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்			2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி			2022 டிசம்பர் 31இல்உள்ளவாறான நிறுவன புத்தகங்களின் படி பணமுற்பண மீதி	2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் படி பணமிற்பண மீதி
	1			2			3			4				
	கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம்	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் (தீர்க்கப்படாத உப பணிமுற்பணங்கள் தவிர்த்த)	மொத்தம்	திறைசேரி	ஏனைய மூலங்கள்	மொத்தம்	செலவினம்	காசு	மொத்தம்	தீர்க்கப்படாத உப பணிமற்பண மீதி	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள்	மொத்தம்	*5	6
	1(i)	1(ii)	1(iii)	2(i)	2(ii)	2(iii)	3(i)	3(ii)	3(iii)	4(i)	4(ii)	4(iii)	5=1(iii)+2(iii)-3(iii)	
7002-0-0-287-0-22-0	-	-	-	3,312,231,877	505,283,250	3,817,515,127	3,817,515,127	-	3,817,515,127	-	-	-	-	-
முழு மொத்தம்	-	-	-	**3,312,231,877**	**505,283,250**	**3,817,515,127**	**3,817,515,127**	-	**3,817,515,127**	-	-	-	-	-

1. மேலே 4 மற்றும் 5 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான

(1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2022.12.31 திகதியன்று பண மீதி — இல்லை

(2) ஏனைய காரணங்கள்- .....

இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.
மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுபடுத்துகிறேன்.

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

*இந்த மீதி நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்படவேண்டும்

ACA - 4

ஏசீஏ -4

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் கூற்று

செலவின தலைப்பு இல : 269

திணைக்களம்:மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

ரூபா

வைப்புக் கணக்குகளின் பெயர்	வைப்பு இலக்கம்	2022 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி	வருடக் காலப்பகுதியில் வரவு வைக்கப்பட்டது	வருடக் காலப்பகுதியில் பற்று வைக்கப்பட்டது	2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	திறைசேரிப் புத்தகங்களின்படி 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி
பாதுகாப்பு வைப்பு	6000-0-0-001-0-074-0	5,428,170	30,775,099	29,452,951	6,750,318	6,750,318
விலை மனு வைப்பு	6000-0-0-002-0-098-0	0	25	25	0	0
தனியார் நிறுவனங்களினால் செய்யப்படுகின்ற வைப்புக்கள்	6000-0-0-013-0-066-0	19,046,163	295,800,098	291,963,201	22,883,059	22,883,059
மாகாண சபைகளுக்கு வருமானங்களை மாற்றுதல்	6000-0-0-014-0-010-0	190,500	48,112,624	48,203,124	100,000	100,000
பிடிகாசு - கொந்தராத்து	6000-0-0-016-0-049-0	74,693,448	27,909,657	44,582,961	58,020,144	58,020,144
இழப்பீடு	6000-0-0-017-0-017-0	100,000	200,000	0	300,000	300,000
நியதிச்சட்டங்களுக்கு ஏற்ப தற்காலிகமாக பேணப்படும் பிடிகாசு	6000-0-0-018-0-058-0	55,025	2,505,100	2,505,725	54,400	54,400
மொத்தம்		**99,513,306**	**405,302,603**	**416,707,987**	**88,107,922**	**88,107,922**

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

ACA – 5

ஏசீஏ- 5

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள் கூற்று

செலவின தலைப்பு இல :269

திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

ரூபா

முற்பண கணக்குகளின் பெயர்	முற்பண கணக்கு இலக்கம்	முற்பண கணக்குகளின் எண்ணிக் கை	2022 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி (1)	செலவினத்தின் அதிகபட்ச எல்லைகள் ரூபா 40,000,000.00		பெறுகைகளின் அதிகபட்ச எல்லை ரூபா 32,000,000.00		பற்று மீதியின் அதிகபட்ச எல்லை ரூபா 149,000,000.00	பொறுப்புக்களின் அதிகபட்ச எல்லை ரூபா	2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி
				வருடத்தினுள் பற்று வைத்தல் (2)		வருடத்தினுள் வரவு வைத்தல் (3)		உள்ளவாறு மீதி 4=(1)+(2)-(3)		
				காசாக	குறுக்குப் பதிவுகளினூடாக	காசாக	குறுக்குப் பதிவுகளினூடாக			
(1) அரசாங்க அலுவலர்களின் முற்பணம்	26901		151,719,233	37,214,041	3,944,970	42,002,027	3,930,646	146,945,572	-	146,945,572
(2) ஏனைய முற்பணங்கள்										
(3) நானாவித முற்பணங்கள்										
முழு மொத்தம்			151,719,233	37,214,041	3,944,970	42,002,027	3,930,646	146,945,572	-	146,945,572

5

திருமதி. இ. மோகன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2023.02.14

Mrs.I. Mohan
Chief Accountant
District Secretariat
Batticaloa.

ACA – 5(a)

ஏசீஏ- 5(ஏ)

2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கு கூற்று

செலவின தலைப்பு இல :269

திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

முற்பண இலக்கம்	கருத்திட்ட விபரம்	செலுத்திய திகதி	வவுச்சர் இலக்கம்	செலுத்திய தொகை (ரூ)	2022.01.01 திகதியில் மீதி (ரூ)	2022 ஆம் ஆண்டினுள் முன்னைய வருடத்திற்கு உரியவை	2022 ஆம் ஆண்டினுள் தற்போயை வருடத்திற்கு உரியவை	2022.12.31 திகதியில் மீதி (ரூ)
(1) வாடகை முற்பணம்								
உதா: 9188-250-0-1-0-1	இல்லை							
.....								
.....								
மொத்தம் (அ)								
(2) பணி முற்பணம்								
உதா: 9188-250-0-2-0-1								
.....								
.....								
மொத்தம் (ஆ)								
முழு மொத்தம் (அ)+(ஆ)								

ACA – 5(b)

ஏசீஏ- 5(பி)

2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கக் கணக்கு கூற்று

செலவின தலைப்பு இல : 269	திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

முற்பண இலக்கம்	கருத்திட்ட விபரம்	2022.01.01 திகதியில் மீதி (ரூ) (1)	2022 ஆம் ஆண்டினுள்		2022.12.31 திகதியில் மீதி (ரூ) 4=1+3-(2)
			அறவீடு (வரவு) (2)	கொடுப்பனவு (பற்று) (3)	
(1) வாகை முற்பணம் உதா: 9189-250-0-1-0-1 .... மொத்தம் (அ) (2) பணி முற்பணம் உதா: 9189-250-0-2-0-1 .... மொத்தம் (ஆ)	இல்லை				
முழு மொத்தம் (அ)+(ஆ)					

ACA – 6

நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்று – 2022

செலவின தலைப்பு: 269 திணைக்களம்: மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

Cumulative Non Financial Asset Accounts Report- Central Govt-2022

Land-9153: 558,896,400.00 Table: SA 82
Building- 9151: 1,378,498,536.92 Year: 2022
மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தினை தவிர்த்து 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின்

செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக்

கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

(அ) திறைசேரி அச்சீட்டுத்தாளின் (SA-70) பிரகாரம், திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 3,817 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும் ரூபா 3,312 மில்லியன் தொகையாக நிதி செயலாற்றல் கூற்று (ACA-F) மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் (ACA-C) குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 505 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாதமை

நட்டங்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு, பொறுப்புக்கள் பதிவேடு மற்றும் மின் பொருத்துக்களின் பதிவேடு ஆகியவற்றை முறையே நிதிப் பிரமாண இலக்கங்கள் 110, 214 மற்றும் 454(2) ஆகியவற்றின் பிரகாரம் நாளதுவரையாக்கி பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 6.2 மில்லியன் தொகை செலுத்த வேண்டியதாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக மாவட்டச் செயலகத்தின் நானாவித வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொம்ப்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் இனங்காணப்பட்ட காணி 24 ஹெக்டெயராக மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதி ரூபா 559 மில்லியனாக நிதியல்லாத சொத்துகள் கூற்றில் காட்டப்பட்டது. எனினும், நிதி நிலைமைக் கூற்றில் (ஏசிஏ-பி) குறிப்பிடப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 487 மில்லியன் கூட்டுமொத்தமாகும். அதன் பிரகாரம் ரூபா 72 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், அவ்வாறான பிரதேச செயலகங்களில் இருந்து காணி உரிமைத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைப்பு 269 தொடர்பாக மீளாய்வாண்டின் போது நிதியல்லாத சொத்துக்களின் மொத்த சுவீகரிப்பு பெறுமதி திறைசேரி அச்சீட்டுத்தாள்களின் (இல. எஸ்ஏ 80) பிரகாரம் ரூபா 115 மில்லியனாக இருந்த போதிலும் இது ரூபா 108.8 மில்லியனாக திரண்ட நிதியல்லாத சொத்துக் கணக்கு அறிக்கையில் (எஸ்ஏ-82) காட்டப்பட்டதுடன் இது மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் (ஏசீஏ-எவ்) ரூபா 108.6 மில்லியனாக காட்டப்பட்டது. அதன் பிரகாரம், நிதியல்லாத சொத்துக்களின் சுவீகரிப்பு பெறுமதி மூன்று வெவ்வேறு கூற்றுக்களில் மூன்று வெவ்வேறு தொகைகளால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கணனிகள், மின் உபகரணங்கள், தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 811,087 தொகையால் பிழையாக குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அலுவலக உபகரணங்கள் ரூபா 464,850 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நிதியல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 346,236 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) "அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமைத்துவப் பிரச்சனைகளைத் தீர்க்கும் அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்கள் முகாமைத்துவம்" தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு உரித்தில்லாத வாகனங்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு உரித்தில்லாத 04 வாகனங்களின் உரிமைத்துவம் இது வரையிலும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ரூபா 2,521 மில்லியன் நிதியேற்பாடுகளில் இரண்டு அமைச்சுக்களுக்காக ரூபா 758 மில்லியன் கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 729 மில்லியன் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. இந்த சேமிப்புக்கள் 54 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 43.4 மில்லியன் கூட்டுமொத்த தொகை விவசாய அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 748 மில்லியன் நிதியேற்பாடு மூலம் செலவிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அறிக்கையின் (எஸ்ஏ-11) பிரகாரம் இது அந்த அமைச்சின் பெயர் மூலம் ரூபா 43.6 மில்லியனாக காட்டப்பட்டது.

(இ) பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 688 மில்லியன் நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 661 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அறிக்கையின் (எஸ்ஏ-11) பிரகாரம் அதே அமைச்சில் அந்த அமைச்சின் பெயர் மூலம் ரூபா 667 மில்லியனாக காட்டப்பட்டது.

(ஈ) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 24 மில்லியன் நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 23.96 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அறிக்கையின் (எஸ்ஏ-11) பிரகாரம், இது அதே அமைச்சில் அந்த அமைச்சின் பெயர் மூலம் ரூபா 24.1 மில்லியனாக காட்டப்பட்டது.

(உ) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 448 மில்லியன் நிதியேற்பாடு மூலம் ரூபா 449 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரி அறிக்கையின் (எஸ்-11) பிரகாரம், அதே அமைச்சில் அந்த அமைச்சின் பெயர் மூலம் ரூபா 615 மில்லியனாக காட்டப்பட்டது.

2.2 பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாவட்ட செயலகத்தில் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அம்முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேணடும்.

(ஆ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் பதில் வழங்கப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்துவதற்கு செயற்திறனான பொறிமுறையொன்று உள்ளதென்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள்	
(i) இல. 104 (3)	முழு அறிக்கையை தயாரிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமென கருதினால் ஆரம்ப அறிக்கை உடனடியாக அனுப்பப்பட வேண்டும். இயன்றவரை நட்டத்தின் தன்மை மற்றும் பரப்பு (தரம் மற்றும்/ அல்லது பெறுமதி), காரணம், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி மற்றும் நடாத்தப்படும் விசாரணையின் வகை போன்ற அனைத்து முக்கியமான விபரங்களும் உள்ள ஆரம்ப அறிக்கை வழங்கப்பட வேண்டும். எனினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் தொடர்பான 04 வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதில் கணிசமான தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டிருந்தது.
(ii) இல. 104 (4)	முழு அறிக்கையை நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து (அல்லது அதன் கண்டுபிடிப்பு)

மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விபத்து இடம்பெற்ற திகதியிலிருந்து கணிசமான காலப்பகுதி கடந்துள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் 08 வாகன விபத்துக்கள் தொடர்பான ரூபா 1,413,325 கூட்டுமொத்தமான நட்டத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பான உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களின் பெயர், பதவிகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

2.4 வைப்பு

நான்கு பிரதேச செயலகங்கள் தொடர்பாக காணி சுவீகரிப்புக்காக பெறப்பட்ட ரூபா 9.9 மில்லியன் தொகை உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சில் வைப்பு கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

ஐந்து உப செயற்திட்டங்களின் பெயரில் கோறளைப்பற்று தெற்கு, கிரண் பிரதேச செயலகத்தின் இரண்டு இலட்சம் சமுர்த்தி குடும்பங்களின் அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக 319 சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் சார்பில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 15,870,250 தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. குடும்ப அலகு (பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள்), குடும்ப பலத்தை கண்டறிதல், பாதிப்புக்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல், வாய்ப்புக்களை அதிகப்படுத்துதல் மற்றும் அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு குடும்ப அடிப்படையிலான பொருளாதார வலுவூட்டலை இனங்காணுதல் என்பன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். இவற்றில், வலுவூட்டப்பட்ட பயனாளி குடும்பங்கள், மேல், நடுத்தர மற்றும் கீழ் என மூன்று முக்கிய பிரிவுகளில் இனங்காணப்பட்டு அதில் உயர் வருமானம் பெறும் பிரிவில் உள்ள 200,000 பயனாளி குடும்பங்களை வலுவூட்டுவதை செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாடு வளர்ப்பு செயற்திட்டம்

கிரண் மேற்கு பகுதியில் கால்நடை வளர்ப்புக்கு இருவர் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் 25 இற்கும் மேற்பட்ட மாடுகளையும், 50 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர் காணியையும் வைத்திருந்தமையும், அவர்கள் இருவரும் அந்த கிராமத்தில் செல்வந்தர்கள் என்பதும் கண்டறியப்பட்டது.

(ஆ) விவசாய செயற்திட்டம்

---

90 விவசாயப் பயனாளிகளுக்கு 90 தண்ணீர் பம்பிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,387,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வழங்கப்பட்ட தண்ணீர் பம்பிகளில் பெரும்பாலானவை பயிரிடல் நோக்கங்களுக்காக அவற்றை பயன்படுத்தாமல் வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயனாளிகளின் குடியிருப்புக்களில் இருந்து வெகு தொலைவில் உள்ள வனப்பகுதியில் பயிரிடல் காணி அமைந்துள்ளதால் தண்ணீர் பம்பிகளின் பாதுகாப்பை கருத்தில் கொள்ள முடியவில்லை.

3.2 செயற்திட்ட அமுல்ப்படுத்தலில் உள்ள தாமதங்கள்

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP) மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) ஆகியவற்றுடன் இணைந்து, இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்திற்கு எதிராக சமூகங்களின் பின்னடைவைக் கட்டியெழுப்புவதற்கான மூன்று வருட செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. 10 கிராம சேவையாளர் பிரிவில் மொத்தமாக 788 குடும்பங்கள் இச்செயற்திட்டத்தினால் (வேலைக்கான பணம் உட்பட) பயனடைந்துள்ளனர். உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை முறியடிப்பதற்காக, தொடர்ச்சியான காலநிலை அதிர்ச்சிகளை சமாளிப்பதற்கு செயற்திட்டப் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்காக பூச்சிய பசியை அடைந்துகொள்வதற்கு பங்களிக்கும் வகையில் செயற்திட்ட இலக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட இலக்கானது பாதிக்கப்படக்கூடிய கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், கால்நடை வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, விவசாய கிணறு அமைத்தல் மற்றும் நுண் நீர்ப்பாசன

முறைமை பயனாளிகளில் அதிகமானோர் இரண்டு ஏக்கருக்கும் அதிகமான நெற்காணிகளை கால்நடைகளுடன் கொண்டுள்ளதால் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்படாத நபர்களுடன் ஒப்பிடும் போது தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ஒரு பயனாளிக்கு 107 கால்நடைகள் இருப்பதும், ஒருவருக்கு மண்டபத்தடி கமநல சேவை நிலைய பகுதிக்கு உட்பட்ட 8 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணி இருப்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) பகுதியளவு செறிவான ஆடு முகாமைத்துவத்திற்காக 10 ஆடுகளுக்கு குறைவாக உள்ள ஆடு விவசாயிகளுக்கு உயர்த்திய ஆட்டு கொட்டகைகளை அமைப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 215,000 நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வின் கள விஜயத்தின் போது, 10 ஆடுகளுக்கு மேல் மற்றும் பாதிக்கப்படாத பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஆடு வளர்ப்பு பயனாளிகளின் 142 வீடுகளில் 29 வீடுகள் பார்வையிடப்பட்டிருந்தன. ஆடு வளர்ப்புக்கான வரையறுக்கப்பட்ட தெரிவு அளவுகோலின் பிரகாரம் இளைஞர்கள்/ பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எனினும், 50 வயதுக்கு மேற்பட்ட 61 பயனாளிகளும், 77 வயதுக்கு மேற்பட்ட இருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) நீர் சேகரிப்பு முறைமைகளை நிறுவுதல், பன்முகப்படுத்தப்பட்ட வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சிறு விவசாயிகளின் வறட்சியைத் தாங்கும் திறனை அதிகரிப்பதே விவசாய கிணறு செயற்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். எனினும், செயற்திட்ட செயற்பாடுகள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் பிரகாரம் 70 விவசாயக் கிணறுகள் அமைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், 2020 முதல் 2022 வரையிலான காலப்பகுதியின் போது 30 விவசாயக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலத்தடி நீர் இருப்பைக் கண்டறிவதற்கு தொழில்நுட்ப ஆதரவுக்கான கிரயம் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நீர் இருப்பைக் கண்டறிவதற்கும், விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கும் நிலத்தை தோண்டுவதற்கு ஏற்படும் கிரயத்தை

பங்களிப்பதற்கு இயலாமையால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் செயற்திட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன.

(iii) விவசாயக் கிணறுக்காக வரையறுக்கப்பட்ட தெரிவு அளவுகோல்களின் பிரகாரம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற பாதிக்கப்படக்கூடிய குடும்பமாக இருந்த போதிலும் பாதிக்கப்படாதவர்களிற்கு விவசாய கிணறுகளை அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது.

(iv) விவசாயக் கிணறுகள் முறையான குழாய் மற்றும் நீர்ப்பாசன முறைமை இல்லாமல் வழங்கப்படுகின்றன. இதனால், பெரும்பாலான பயனாளிகள் விவசாய கிணற்றை அவர்களது பயிரிடலிற்கு பயன்படுத்த முடியாதிருந்தது.

(v) மின்சாரம் இல்லாத பயனாளிகளுக்கு மின்சார நீர் பம்பிகள் வழங்கப்பட்டிருந்தன.

(vi) விவசாயக் கிணறுகள் அமைப்பதற்கான வரையறுக்கப்பட்ட தெரிவு அளவுகோலின் பிரகாரம் இளைஞர்கள், பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எனினும், எந்தவொரு பெண் தலைமைத்துவக் குடும்பமும் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 34 பேரில் 12 பயனாளிகள் மாத்திரமே 50 வயதுக்குட்பட்டவர்களாவர்.

(vii) 65 வயதுக்கு மேற்பட்ட மற்றும் மனைவியுடன் வசிக்கும் நான்கு பயனாளிகளுக்கு உள்ளீடுகளுடன் கூடிய விவசாயக் கிணறை அமைப்பதற்கு ரூபா 776,600 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களில் ஒருவர் 72 வயதுடையவராவர். எனினும், மேலதிக கிரயத்தை பங்களிக்க இயலாமையால் பாதிக்கப்படக்கூடிய இளம் குடும்பங்கள் செயற்திட்டத்தில் இருந்து விலகிக் கொண்டன.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.3.1 கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகம் - கிரண் பிரிவுக்குட்பட்ட வள்ளி ஆறு, வடமுனை ஆறு, மாதுரு ஓயா ஆறு, பொண்டுகல்செகனை ஆறு, முள்ளிப்பொத்தானை ஆறு, அத்துச்சேனை ஆறு மற்றும் முள்ளிவட்டவான் ஆற்றுப் பிரதேசங்களிலும் மனித ஆற்றலைப் பயன்படுத்தி உரிய பிரதேச செயலகங்களால்

வழங்கப்பட்ட பரிந்துரைகளின் கீழ் சுரங்க நடவடிக்கைகளுக்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தால் ஒதுக்கப்பட்ட 6 இற்கும் மேற்பட்ட மணல் அகழ்வு இடங்களிலும் மணல் அகழ்வுகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிரண் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு, ஓவியா ரிசார்ட், கிரந்தோட்டம் என்ற இடத்தில் ஆற்று மணல் அகழ்வு உரிமம் ஒரு தனிநபருக்கு "சுரங்கம் அல்லாத நடவடிக்கைகளில் இருந்து கனிமத்தை அகற்றுவதற்கான விசேட அனுமதியின் கீழ் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. எனினும் அந்தப் பகுதியில் எந்த ஆறும் காணப்படவில்லை. மேலும்,

(i) அனுமதிக்கப்பட்ட நில எல்லைக்குள் ஆற்று மணலை அகற்றுவதற்கு மேற்படி உரிமம் செல்லுபடியாகும். ஆனால், ஆற்று மணல் அகழ்வதற்கான உரிமம் என்ற பெயரில் உள்நாட்டில் மணல் அகழப்பட்டது.

(ii) பிரதேச செயலாளரின் பரிந்துரையின்றி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) மொத்தமாக 1400 கியூப்களுக்கான ஆற்று மணல் அகழ்வு உரிமம் இரண்டு மாதங்களுக்கு எந்த அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களோ அல்லது சரியான காரணங்களோ இல்லாமல் வழங்கப்பட்டது.

(iv) GSMB ஆல் வழங்கப்பட்ட மேற்படி மணல் அகழ்வு அனுமதிப்பத்திர அனுமதியின் கீழ் "எக்கோ டூரிஸ்ட் ஹட்ஸ்" ஐ நிறுவுவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் மணல் அகழும் தொழிலைத் தவிர மேற்படி செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடித இல. சீஈஏ/17/ஈஏ/பீசீ/பிகேஓ/005/2021 இன் நிபந்தனையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபையின் எழுத்துமூல அங்கீகாரம் கட்டாயமாக்கப்பட்டது. எனினும் மேற்படி செயற்திட்டத்திற்கு பிரதேச சபை அங்கீகாரத்தை வழங்கியிருக்கவில்லை. பிரதேச சபையின் அங்கீகாரமின்றி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி செல்லுபடியாகாது. அங்கீகாரம் இல்லாவிட்டாலும், மேற்படி

உண்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் GSMB ஆல் சுரங்க உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(vi) செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்க வேண்டிய பிரதேச சபையின் அங்கீகாரத்தை கருத்தில் கொள்ளாமல், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மணலை போக்குவரத்துச் செய்வதற்கு மேலதிக அனுமதியை வழங்கியிருந்தது.

(ஆ) வள்ளி ஆறு மற்றும் மாதுரு ஓயா ஆற்றங்கரைக்கு அருகாமையில் சுரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக ஆற்றின் அகலம் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. மேலும்,

(i) வள்ளி ஆற்றின் கரையில் சட்டவிரோதமாக 2572.5 சதுரமீற்றர் நிலம் தோண்டப்பட்டு, மொத்தமாக குறைந்தபட்சம் 1,181 கியூப் மணல் அகழப்பட்டிருந்தது. மேற்படி சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக இயற்கையான ஆற்றின் ஓட்டம் மாற்றப்பட்டிருந்தது.

(ii) அக் குறிப்பிட்ட இடத்தில் ஆற்றின் அகலம் 20 மீற்றருக்கு மேல் விரிவாக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது,

(iii) சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு எதிராக பிரதேச செயலாளரினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அரச நிலங்களில் ஆற்றுடன் இணைந்த சட்டவிரோத மணல் அகழ்வு தடையின்றி இடம்பெற்று வருகின்றது. இந்த சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளால் பெறுமதியான குபுக் (kubuk) மரங்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன் இது ஆற்றங்கரை மற்றும் ஆற்றுப்படுக்கையில் அரிப்பு ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.

(iv) கிழங்குப்பளை கிராமத்திற்கு செல்லக்கூடிய 2.5 மீற்றர் அகல வீதி மற்றும் ஆற்றங்கரையை அண்மித்துள்ள சின்னகுமாரி கண்டத்தின் வயல் நிலங்களுக்கு செல்லும் பாதை சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக சேதமடைந்துள்ளது. எனினும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முள்ளிவட்டவான் துறையடி மற்றும் வயல் துறையடி ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழப்பட்டிருந்தது. மேலும், முள்ளிவட்டவான்

துறையடி மற்றும் வயல் துறையடி ஆற்றங்கரையில் 2,757 சதுர மீற்றர் நிலம் சட்டவிரோதமாக அகழப்பட்டு, மொத்தமாக குறைந்தபட்சம் 1,170 கியூப் மணல் அகழப்பட்டிருந்தது.

(ஈ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து பல நிபந்தனைகளுடன் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குப் பரிந்துரை பெறப்பட்டிருந்தது. எனினும், GSMB அந்த நிபந்தனைகளைக் கருத்தில் கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நீர்ப்பாசனத் திணைக்களம் மாதமொன்றிற்கு அதிகபட்சம் 30 கியூப்களைப் பரிந்துரைத்திருந்தது. எனினும், GSMB ஆல் 30 இற்கும் மேற்பட்ட கியூப்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் நிபந்தனை மீறலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மாதமொன்றிற்கு அதிகபட்சமாக 35 கியூப்களைப் பரிந்துரைத்திருந்தது. எனினும், 35 கியூப்களுக்கு மேல் GSMB ஆல் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் நிபந்தனை மீறலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வாகனேரியில் நிரந்தரமாக வசிக்கும் நபர்களுக்கு முள்ளிவட்டவான் இடத்தில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐந்து மணல் அகழ்வு விண்ணப்பங்கள் பிரதேச செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பப்பட்டிருந்தன. சுரங்க அளவு அதிகபட்சம் 35 கியூப்கள் 3 மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்ற நிபந்தனைகளுடன் கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரால் ஐந்து விண்ணப்பங்களுக்கும் ஒரே திகதிகளில் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், பிரதேச செயலாளரின் பரிந்துரையை கருத்தில் கொள்ளாமலும் சுற்றாடல் அனுமதி மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதி என்பவற்றை பெற்றுக்கொள்ளாமலும் ஐந்து அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கும் GSMB ஆல் ஒரே காலப்பகுதியில் உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) புனானை கிழக்கின் விசாரோடையில் மணல் அகழ்விற்காக மணல் படிவுகள் காணப்படாததால் 2017 மார்ச் 07 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட இடத்தில் மணல் அகழ்விற்கான சுற்றாடல் அனுமதி ஒருவருக்கு நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆனால், 2017 ஒக்தோபர் 17 இல்

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 2017 திசெம்பர் 06 இல் சுற்றாடல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்தக் காலப்பகுதி வறட்சிக் காலமாக காணப்படுவதாலும் பொதுவாக மழைக்காலங்களில் மணல் அள்ளப்படும் என்பதாலும் 8 மாதங்களுக்குள் மணல் அள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

(எ) சுற்றாடல் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் GSMB ஆல் இருபத்தி இரண்டு மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளரினால் சுற்றாடல் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆற்று மணல் அகழ்வு உரிமம் GSMB ஆல் பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் முறையான கள விஜயம் மற்றும் ஆறுகளின் மணல் படுக்கை பற்றிய சரியான பகுப்பாய்வு இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் அரச காணிகள், தனியார் வயல் நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்களில் சட்டவிரோதமாக மணல் அகழுகின்றனர்.

(ஐ) கற்குடா கிராம சேவையாளர் பிரிவில் இருந்து தந்தை மற்றும் மகனுக்காக இரண்டு விண்ணப்பப் படிவங்கள் நியாயத்தன்மையைக் கருத்தில் கொள்ளாமல் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அகழ்வாராய்ச்சிக்கான சரியான இடத்தை உறுதி செய்வதற்காக செல்வாக்கு மிக்க நபர்களுக்குப் பதிலாக அனைத்து பொதுமக்களின் நலனுக்காக இயற்கை வளங்களை கவனமாக ஒதுக்க வேண்டும் என்பதை பிரதேச செயலாளர் கருத்தில் கொண்டிருக்கவில்லை.

(ஒ) அகழ்வதற்கான சரியான இடத்தை உறுதிப்படுத்துவதற்கு GPS ஒருங்கிணைப்புக்கள் மூலம் சுரங்க இருப்பிடம் உரிமத்தில் அச்சிடப்பட்டிருந்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதியின் அடிப்படையில் ஒருங்கிணைப்புக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எனினும், மத்திய சுற்றாடல் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புக்கள் GSMB ஒருங்கிணைப்புக்களிலிருந்து வேறுபடுகின்றன.

3.3.2 கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகம் - வாகரை பிரிவுக்குட்பட்ட வெருகல் ஆற்றுப் பகுதி, வண்ணகிருமிச்சை, கிருமிச்சை, ஊத்தோடை மற்றும் மாவடிஓடையிலும் மனித ஆற்றலைப் பயன்படுத்தி உரிய பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் கீழ் மணல் அகழ்வு நடவடிக்கைகளிற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தால் ஒதுக்கப்பட்ட 5

இற்கும் மேற்பட்ட மணல் அகழ்வு இடங்களிலும் தடையின்றி மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 15 மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு பிரதேச செயலாளரினால் 600 பேர்ச் அரச காணி குறுகிய கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1947 இன் 8 ஆம் இலக்க அரச காணி கட்டளைச் சட்டத்தின் 214 (02) ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் LC – 75 படிவங்களில் வழங்கப்பட வேண்டும். எனினும், காணியின் விளக்கத்துடன் கடித வடிவமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) 1947 இன் 8 ஆம் இலக்க காணி கையேடு மற்றும் அரச காணி கட்டளைச் சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் 195 ஆம் பிரிவின் பிரகாரம் அரச காணி பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட வேண்டும். எனினும், மேற்படி ஏற்பாட்டிற்கு முரணாக பிரதேச செயலாளரினால் மேற்படி குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

(iii) தற்காலிக குத்தகையை வழங்குவதற்கு முன்னர் மாகாண காணி ஆணையாளரிடம் முன் அனுமதி பெறப்பட வேண்டும். எனினும், பிரதேச செயலாளரினால் முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்கத்திற்கு எவ்வித வருமானமும் கிடைக்காமல் அரச காணி வருடா வருடம் தற்காலிக குத்தகைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) 100 கியூப்களை களஞ்சியப்படுத்துவதற்கு 40 பேர்ச்கள் காணி ஒதுக்கப்பட்டிருந்த போது 35 கியூப்களை களஞ்சியப்படுத்துவதற்கு 80 பேர்ச்கள் காணி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததால் கோரப்பட்டதற்காக மதிப்பிடும் நோக்கங்கள் எதுவுமின்றி மணலை களஞ்சியப்படுத்துவதற்காக பிரதேச செயலாளர் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வைத்திருப்போருக்கு குறுகிய கால குத்தகை அடிப்படையில் கடிதங்களை வழங்கியிருந்தார்,

(vi) தற்காலிக குத்தகையை வழங்குவதற்கு முன்னர் மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(vii) அனுமதிப் படிவம் - LC.75 இன் கீழ் பொருந்தக்கூடிய நிபந்தனைகள் தொடர்பாக குத்தகைதாரருக்கும் பிரதேச செயலாளருக்கும் இடையில் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(viii) மணல் அகழ்வு உரிமம் வைத்திருப்பவர்களுக்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தால் முறையான காணி குத்தகை அனுமதி படிவத்தைப் (LC-75) பெற்றுக்கொள்ளாமல் வர்த்தக உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(ix) ஆற்று மணலை களஞ்சியப்படுத்துவதற்காக குத்தகை காணியை பெற்றிருந்த குறுகிய கால குத்தகைதாரர்கள், சட்டவிரோதமாக மணலை களஞ்சியப்படுத்துவதற்காக ஏனைய TDL உரிமத்தை கொண்டிருப்பவர்களுடன் TDL உரிமம் இல்லாத ஏனைய மணல் அகழ்வு உரிமம் வைத்திருப்பவர்களை இணைத்துக்கொள்வதற்கு அனுமதித்திருந்தனர்.

(ஆ) வர்த்தக உரிமம் ஒரு வருடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், ஆறு மணல் அகழ்வுக்கான உரிமம் 6 மாதங்களுக்கும் குறைவாகவே வழங்கப்பட்டிருந்தது.

(இ) ஒவ்வொன்றும் 40 பேர்ச் காணிக்கு 80 பேர்ச் காணி கணவன் மற்றும் மனைவிக்கு இரண்டு குறுகிய கால குத்தகைகளாக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான அங்கீகாரமின்றி கணவன் மற்றும் மனைவிக்கு குறுகிய கால குத்தகைக்கு ஆற்று மணலை களஞ்சியப்படுத்துவதற்காக உண்மையான தேவைகளை சரிபார்த்து 40 பேர்ச்சிலான இரண்டு காணித் துண்டுகள் வழங்கப்பட்டிருந்தது.

(ii) GSMB ஆல் அறிக்கையிடப்பட்ட சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக, 2021 ஏப்ரல் 08 இல் ஒரு நபரின் குறுகிய கால காணி குத்தகை இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்படி நபரின் மனைவிக்கு 40 பேர்ச் அரச காணி பிரதேச செயலாளரினால் குறுகிய கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், ஒருவர் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பிரதேச செயலாளருக்கு அறிக்கையிட்டிருந்ததுடன் பிரதேச செயலாளர் குறுகிய கால குத்தகையை இரத்து செய்து, மேற்படி நபரின் மனைவிக்கு புதிய குறுகிய கால குத்தகை கடிதத்தை வழங்கியிருந்தார்.

(ஈ) சுற்றாடல் மற்றும் வனத் திணைக்கள அனுமதியின்றி 16 நபர்களுக்கு ஆற்று மணல் அகழ்வு உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) உரிம இலக்கத்திற்கான சுற்றாடல் பரிந்துரையானது 2018 பெப்ரவரி 22 இல் GSMB இன் நிலுவைத் திகதி வரைக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் மாதமொன்றிற்கு அதிகபட்சம் 35 கியூப்கள் அனுமதிக்கப்பட்டன. எனினும், சுற்றாடல் பரிந்துரையை கருத்தில் கொள்ளாமல் திகதியை மாற்றுவதன் மூலம் 100 கியூப்களை அகழ்வதற்கு உரிம இலக்கம் மாற்றப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கஹிரவெளி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த நான்கு குடும்ப உறுப்பினர்களுக்கு நியாயத்தன்மையை கருத்தில் கொள்ளாமல் பத்து விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க வளங்கள் செல்வாக்கு மிக்க நபர்களுக்குப் பதிலாக அனைத்து பொதுமக்களின் நன்மைகளுக்கும் கவனமாக ஒதுக்கப்பட வேண்டும் என்பதை பிரதேச செயலாளர் கருத்தில் கொள்ளத் தவறியிருந்தார்.

(எ) கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ள ஒன்பது நபர்களுக்கு மணல் அகழ்விற்கான விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. மேலும், ஐந்து உரிமங்கள் ஒருவரால் செயற்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

ஏ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மதுரங்கேணி குளத்திலிருந்து மணலை அகழ்வதற்கு நபர் ஒருவரிற்கும் மற்றொரு நபரிற்கும் ஆற்று மணல் அகழ்வு உரிமம் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பப்பட்டிருந்தது.

3.3.3 நதி மணல் அகழ்வு

மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்காக வழங்கப்பட வேண்டிய பரிந்துரைக்காக போரதீவு பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகத்தினால் முறைமையொன்று உருவாக்கப்பட்டு பேணப்பட்டிருந்தது. எனினும், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் அந்த முறைமையைப் பின்பற்றுவதற்கு அதன் ஆதரவை வழங்கியிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அம்பாறை மத்திய நீர்ப்பாசன பொறியியலாளரின் முன் அனுமதி இரத்து செய்யப்பட்டமையினால் பல ஆற்று மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களின் உரிமத்தை இரத்து செய்வதற்கு பிராந்திய சுரங்க பொறியியலாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், மூன்று முறை கோரிக்கைக்கான பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை அல்லது GSMB மூலம் குறிப்பிட்ட உரிமம் வைத்திருப்பவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதமொன்றிற்கு அதிகபட்சமாக 35 கியூப் மணல் மற்றும் வீதி திருத்தக் கட்டணங்கள் போரதீவு பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் தனியார் கம்பனியொன்றின் மணல் அகழ்வு விண்ணப்பத்தை பிரதேச செயலாளர் பரிந்துரைத்து அனுப்பியிருந்தார். எனினும், மேற்படி நிபந்தனைகளுக்கு இணங்காமல் GSMB ஆல் உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச செயலாளர் மாதமொன்றிற்கு 35 கியூப் மணலுக்கு மாத்திரமே பரிந்துரை செய்திருந்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மணல் அகழ்வினால் ஆற்றுப் படுக்கைகள் சேதமடைந்துள்ளதெனவும் அந்த இடத்தில் மணல் படுக்கை காணப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. எனினும், GSMB ஆல் மாதமொன்றிற்கு 210 கியூப்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நியாயத்தன்மையை கருத்தில் கொள்ளாமல் மூன்று குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறு விண்ணப்பப் படிவங்கள் பரிந்துரைக்கப்பட்டு GSMB இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் செல்வாக்கு மிக்க நபர்களுக்குப் பதிலாக அனைத்து பொதுமக்களின் நலனுக்காக இயற்கை வளங்கள்

எருவில் பற்று பிரதேச செயலகத்தின் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கிராம உத்தியோகத்தரால் மாங்காடு, தெட்டதீவு - வடக்கு மற்றும் களுதாவளை - 03 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளின் QR குறியீடுகள் மற்றும் QR குறியீடுகளுக்கான பதிவேடு பேணப்பட்டு கணக்காய்வுக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தெட்டதீவு - வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்காக பெறப்பட்ட பெறுவனவு புத்தகம் (பொது-172) 2022 ஆகஸ்ட் 26 இல் முடிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த கிராம சேவையாளர் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் அதை கணக்குப் பிரிவிற்கு கையளித்து புதிய பெறுவனவு புத்தகத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. கிராம உத்தியோகத்தர் பெற்றுக்கொள்ளாததால், அந்த கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் 425 குடும்பங்களுக்கு 2022 ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பிரதேச செயலகத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் சரிபார்த்து அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(v) களுதாவலி-04 (சாந்திபுரம்) கிராம சேவையாளர் பிரிவுக்காக ஒதுக்கப்பட்ட 09 QR குறியீடுகள் கிராம உத்தியோகத்தரால் தவறவிடப்பட்டிருந்தன. எனினும், கணக்காய்வுத் திகதி வரை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆட்பதிவு திணைக்களத்திற்கு இது தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அது காணாமல் போன போது கிராம உத்தியோகத்தரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட 06/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06.4 ஆம் பந்தியின் பிரகாரம் கர்ப்பிணித் தாய்மார்களின் வசிப்பிடம் கிராம உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் இரட்டிப்பு கொடுப்பனவுகளைத் தடுக்கும் வகையில் அதற்கிணங்க பதிவுகள் பேணப்பட வேண்டும். எனினும், மண்முனை தெற்கு எருவில் பிரதேச செயலகத்தின் மாங்காடு, தெட்டதீவு-வடக்கு, களுதாவளை-03, களுதாவளை 04 (சாந்திபுரம்), கோட்டைக்கல்லாறு-தெற்கு மற்றும் கோட்டைக்கல்லாறு-வடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இவ்வாறான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(vii) மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச செயலாளரினால் ஒரு கிராம உத்தியோகத்தரிற்கு ஒரு கிராம சேவையாளர் பிரிவு என்ற அடிப்படையில் ஐந்து கிராம உத்தியோகத்தர்களிற்கு ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகள் ஒதுக்கப்பட்டிருந்த அதேநேரம் 3 கிராம சேவையாளர் பிரிவுகள் ஒரு கிராம உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் கிராம சேவையாளர் பிரிவுகள் கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக மகிழூர் கிழக்கு, மகிழூர்முனை மற்றும் மகிழூர் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களால் வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் மக்களுக்கு தரமான சேவையை வழங்க முடியவில்லை.

(viii) 45 கிராம சேவையாளர் பிரிவுகளில் 17 கிராம சேவையாளர் பிரிவுகள் பதில் கடமை அடிப்படையில் மேவுகை செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், மகிழூர் மேற்கு பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்த கிராம உத்தியோகத்தர் 2023 சனவரி 17 முதல் மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச செயலக அலுவலகத்திற்கு ஒழுக்காற்று விசாரணை காரணமாக எந்தவொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் நியமிக்கப்படாமல் இணைக்கப்பட்டிருந்தார். எனினும், கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 06 வரை எந்தவொரு விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம் 66,842 மக்கள்தொகையுடன் 45 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் 29 கிராம உத்தியோகத்தர்கள் மாத்திரமே நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தமையும் மீதமுள்ள 16 கிராம சேவையாளர் பிரிவுகளின் கடமைகள் பதிற்கடமை அடிப்படையில் கிராம உத்தியோகத்தரால் மேவுகை செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

3.5 காணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான கமநல சேவை நிலையம் காத்தான்குடி பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரதேசத்திற்கு உட்பட்ட புதிய

காத்தான்குடி பிரிவு தெற்கில் உள்ள 167C கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அரச காணியில் அதன் செயற்பாடுகளை நடாத்தி வருகின்றது. இது தொடர்பாக பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பிரமாணங்களின் 224 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு திணைக்களத்திற்கும் மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளரால் அரச காணி கையளிக்கப்பட வேண்டும். காத்தான்குடி கமநல சேவை நிலையம் 1975 ஆம் ஆண்டு முதல் அரச காணியில் இயங்கி வருகின்ற போதிலும் மேற்படி ஏற்பாட்டின் பிரகாரம் காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் அந்த அரச காணி உரிய முறையில் கமநல சேவை நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 பெப்ரவரி 03 ஆம் திகதிய எஸ்பி/ஆர்டி/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச காணிகளை கையளிப்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தால் பல அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் அல்லது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிற்கு எந்தவொரு குத்தகை வசதியின் கீழும் அரச காணிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மேற்படி ஏற்பாட்டிற்கு முரணாக 2002 ஆம் ஆண்டு முதல் காத்தான்குடி கமநல சேவை நிலையத்தால் அரச காணி பல வர்த்தகர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வளாகத்தில் அரச காணியை ஆக்கிரமித்துள்ள அல்லது வைத்திருந்த நபர்களுக்கு செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் அல்லது எழுத்து மூலமான எந்தவொரு சட்டத்தின் பிரகாரமும் வழங்கப்பட்ட அரசின் எழுத்திலான அதிகாரம் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(இ) காத்தான்குடி கமநல சேவை நிலையத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரச காணி 2002 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட விவசாய நடவடிக்கைகளுக்காக அல்லாமல் வணிக நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒருவர் 2002 ஆம் ஆண்டு முதல் அரச காணி வளாகத்தில் குடும்பத்துடன் வசித்து வந்து வியாபாரம் செய்கின்றார். எனினும், கடந்த இருபது வருடங்களாக அரச காணியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளமை தொடர்பாக 167C புதிய காத்தான்குடி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் மற்றும் காத்தான்குடி பிரதேச

செயலகத்திற்கு இணைக்கப்பட்ட காணி உத்தியோகத்தரால் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பிரமாணங்களின் 224 (8) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத் திணைக்களத்திற்கு வழங்கப்படும் அரச காணி குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அந்தந்த மாவட்டச் செயலகம்/ பிரதேச செயலகத்தால் குறித்த காணி மேற்பார்வை செய்யப்பட வேண்டும். அரச காணியின் முன் பகுதி கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 2002 ஆம் ஆண்டு முதல் விவசாயம் சாராத வியாபார நடவடிக்கைகளுக்காக 04 தனிநபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மேற்படி ஏற்பாட்டின் பிரகாரம் அது முறைப்படுத்தப்பட்டிருக்காததுடன் மேற்படி பிரமாணங்கள் மீறப்படுதல் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனம் 2013 ஏப்ரல் 26 இல் ஹபரணையில் விபத்துக்குள்ளாகி தனியார் கம்பனியால் திருத்தப்பட்டது. அறவீடுகளிற்கான பரிந்துரையுடன் முறையான விசாரணையை விரைவுபடுத்தி, முடிவெடுப்பதற்கு 2022 சனவரி 18 ஆம் திகதிய கடிதம் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரால் முறையான விசாரணைச் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தமை 09 ஆண்டுகள் மற்றும் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2022 செப்தெம்பர் 30 வரையிலும் முறையான விசாரணை முடிக்கப்பட்டிருக்காதமையை காட்டுகிறது.

(ஆ) காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்ட வாகனம் 2020 ஒக்தோபர் 26 இல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் விபத்துக்குள்ளாகி அம்பாறையிலுள்ள தனியார் கம்பனியால் திருத்தப்பட்டது. நிதிப்பிரமாண இல. 104(4) இன் பிரகாரம், நட்டம் ஏற்பட்ட (அல்லது அதன் கண்டுபிடிப்பு) திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2021 சனவரி 26 இல் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மேற்படி விபத்து தொடர்பான விசாரணைச் சபைக்கு உத்தியோகத்தர்களை நியமித்து 21 மாதங்கள் கடந்த பின்னரும் 2022 ஒக்தோபர் 30 வரையிலும் விசாரணைச் சபையினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக,

நட்டத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பான உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களின் பெயரையும் பதவியையும் இனங்காண்பதற்கு விசாரணைச் சபை தவறியிருந்தது.

(இ) மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்ட வாகனம் களுவாஞ்சிகுடியில் 2014 யூலை 04 இல் விபத்துக்குள்ளானது. நிதி பிரமாண இல. 104 (4) இன் பிரகாரம் நட்டம் ஏற்பட்ட (அல்லது அதன் கண்டுபிடிப்பு) திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மேற்படி விபத்துக்கான விசாரணைச் சபையை வெவ்வேறு காலப்பகுதியில் மூன்று தடவைகளில் நியமிப்பதற்கான பரிந்துரைக் கடிதத்தை அனுப்பியிருந்தது. இதன் விளைவாக, 08 வருடங்கள் மற்றும் 03 மாதங்கள் தாமதம் அவதானிக்கப்பட்டதுடன், மாவட்டச் செயலகத்தினால் 2022 திசெம்பர் 31 வரை முறையான விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெவ்வேறு காலங்களில் (2014 சனவரி 01 முதல் 2021 மே 26 வரை) 09 கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.7 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மண்முனை மேற்கு, வவுணதீவு, மட்டக்களப்பு பிரதேச செயலகத்தினால் நிர்வகிக்கப்படும் ஐத்தியமலை அரிசி ஆலையின் புனரமைப்பு பணிகள் பல்வேறு காலப்பகுதிகளில் பல ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டன. மட்டக்களப்பின் மண்முனை மேற்கு – வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஐத்தியமலை அரிசி ஆலையின் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபா 62.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதுப்பிக்கப்பட்ட அரிசி ஆலையின் ஒப்பந்தத்திற்கு முந்தைய நிலை

(i) மேற்படி அரிசி ஆலை போர்க்காலத்தில் சேதமடைந்திருந்ததுடன் அரிசி ஆலையில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாமல் கட்டிடங்கள் மாத்திரமே இருந்தன. எனினும், அந்தக் கட்டிடம் மற்றும் காணி யாருக்குச் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்,

- காணியின் சரியான உரிமையின்றி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் கட்டிடத்தை புனரமைப்பதற்கு மாவட்ட செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- கட்டிடத்தை புதுப்பிக்கும் பணிகள் தற்போதுள்ள கட்டிடங்களின் பலம் குறித்த தொழில்நுட்ப பரிசோதனையை பூர்த்திசெய்யாமலேயே மதிப்பிடப்பட்டிருந்தது.

- நிர்மாணப் பணிகளுக்கு முன்னர் செயற்திட்டத்திற்கான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரிசி ஆலையை புதுப்பிப்பதற்கான திட்டமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனால், புனரமைப்பு பணிகளுக்குப் பதிலாக நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும்,

- மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 5 வருட வேலைத் திட்டத்தில் மேற்குறிப்பிட்ட நீண்டகால செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப்பிரமாணங்களின் பிரிவு 20 (2) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீடு, கவனமாக விலையிடப்பட்ட அளவிடைப் பட்டியலின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும், இந்த செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படும் வரை மொத்த செயற்திட்டத்திற்கான அளவிடைப் பட்டியல்கள் (BOQ) மற்றும் பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தோண்டப்பட்ட அடித்தளம் மற்றும் தரையின் அடியில் இறுக்கப்பட்ட மண்ணின் மீதான கறையான் எதிர்ப்பு சிகிச்சையானது நிர்மாணத்திற்கு முன்னரும் பின்னரும் நிலத்தடி கறையான் தாக்குதலுக்கு எதிராக இரசாயனத் தடையுடன் கட்டிடத்தை வழங்குவதற்காக மண், கட்டுமானம், மரம் மற்றும் மின் சாதனங்களுக்கு மேற்கொள்ளப்படும் இரசாயன செயன்முறையாகும். எனினும், அரிசி ஆலையை நிர்மாணிப்பதற்கு முன்னரோ அல்லது பின்னரோ கறையான் எதிர்ப்பு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) அமைந்துள்ள கட்டிட நிலப்பரப்பு கறையான் தாக்குதலுக்கு அதிக உணர்திறன் கொண்டதுடன் அரிசி ஆலை முக்கியமாக நெல் பதப்படுத்துகின்றதாகும், இது கறையான்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். எனினும், கறையான் எதிர்ப்பு சிகிச்சை அளிக்கத் தவறியதால் கட்டிடம் கறையான் தாக்குதலுக்குள்ளானது.

(ii) கட்டிடங்களுக்குள் ஏற்கனவே கறையான் தாக்கியமை அவதானிக்கப்பட்டது.

(இ) உலர்தளமொன்று ரூபா 2,679,312 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சொங்கிறீட் தளத்தின் நிர்மாண இணைப்பிலிருந்து ஏற்கனவே பரவியுள்ள தாருடன் நிரப்பப்பட்ட நிர்மாண இணைப்புடன் உலர்தளம் நிர்மாணிக்கப்பட்டதுடன் நெல்லை தரையில் உலர்த்தும் போது அது நெல்லுடன் கலந்துவிடும்.

(ஈ) பிந்தைய நிர்மாண நிலை

குத்தகை உடன்படிக்கையின் கீழ், மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலாளரினால் அரிசி ஆலை வைரயறுக்கப்பட்ட ஐத்ய கிராமிய விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2020 யூலை 27 இல் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலாளருடன் வைரயறுக்கப்பட்ட ஐத்ய கிராமிய விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்துடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) ரூபா 62,366,923 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் இந்த உடன்படிக்கையின் மூலம் பிணை வைப்புக்கள் எதுவுமின்றி கையளிக்கப்பட்டது.

(ii) உடன்படிக்கையின் பிரிவு - 4 இன் பிரகாரம் வாடகைத் தொகையை வைப்பு செய்வதற்கு வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்கு பிரதேச செயலாளர் திட்டமிட்டார். எனினும், பிரதேச செயலாளரின் பெயரில் வங்கிக் கணக்கைத் திறப்பதற்கான அதிகாரம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் பிரிவு - 16 இன் பிரகாரம் மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் அரிசி ஆலை வளாகத்தில் புதிய நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த முதலீடு எவ்வாறு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது முதலீட்டாளரின் குறித்த முதலீட்டுக்கான உரிமை பற்றிய உட்பிரிவுகள் எதுவும் காணப்படவில்லை.

(iv) அரிசி ஆலையின் குத்தகைதாரரின் கவனக்குறைவு அல்லது அறியாமையால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக உடன்படிக்கையில் எந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சங்கத்தின் நிதி மற்றும் தொழில்நுட்பத் திறனைக் கருத்தில் கொள்ளாமல், வரையறுக்கப்பட்ட ஐத்ய கிராமிய விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 3 ஆண்டு குத்தகை அடிப்படையில் அரிசி ஆலை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக, பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 15 உறுப்பினர்களுடன் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு (2019 செப்தெம்பர் 03 மாத்திரமே பதிவு செய்யப்பட்டது) அரிசி ஆலை குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அதில்,

- மேற்படி சங்கம் 2019 செப்தெம்பர் 03 இல் ரூபா 1,500 மூலதனத்துடனேயே அரிசி ஆலையை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது.

- அரிசி ஆலை குத்தகை உடன்படிக்கை மூலம் முறையாக சங்கத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும் அது மறைமுகமாக தனியார் குழுவிற்கு குத்தகைக்கு விடப்பட்டது.

- வரையறுக்கப்பட்ட ஐத்ய கிராமிய விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் முதலீட்டிற்குப் பதிலாக, நான்கு முதல் ஐந்து நபர்கள் தங்கள் சொந்தப் பணத்தை தொழிற்படு மூலதனத்திற்காகவும், சில அபிவிருத்திப் பணிகளுக்காகவும் அரிசி ஆலையில் முதலீடு செய்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது

(ஊ) செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு அரிசி ஆலையின் சீரான செயற்பாடு மற்றும் முறையான பராமரிப்புக்காக அரிசி ஆலை குத்தகைக்கு பெற்றவரிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஆனால், தற்போது வரை 50 மூட்டை நெல் மாத்திரமே அரிசியாக மாற்றப்பட்டிருந்தது. அரிசி ஆலைக்கான இயந்திரங்களை வழங்குவது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருக்கும் தனியார் கம்பனி ஒன்றின் பணிப்பாளருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் 27.3 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட இயந்திரங்களுக்கான உத்தரவாதக் காலம் 24 மாதங்களாக காணப்பட்டது. எனினும், உற்பத்தி தொடங்குவதற்கு முன்பே உத்தரவாதக் காலம் காலாவதியாகியிருந்தது.

3.8 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

மீளாய்வாண்டிற்கான நிதி பிரமாண இல. 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பை வழங்க வேண்டிய 410 அரசாங்க உத்தியோகத்தர்களில் 17 உத்தியோகத்தர்களிடமிருந்து மாவட்டச் செயலகம் பிணை வைப்பை பெற்றுக்கொள்ளத் தவறியிருந்தது. இதன் விளைவாக, ஏதேனும் நிதி இழப்புக்கள் ஏற்பட்டால், இழப்புக்களை அறவிடுவதற்கு பிணை வைப்புக்களை மாவட்டச் செயலகம் பெற்றிருக்கவில்லை.

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணுதல்

நிலைபேறான அபிவிருத்திக்கான 17 நோக்கங்கள், 169 இலக்குகள் மற்றும் 244 சுட்டிகள் உள்ளடங்கிய 2030 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மாவட்ட செயலகத்தின் நோக்கெல்லையின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு பொருத்தமான நோக்கங்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகள் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

5. நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை டிஎம்ஏ/2009(1) இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் பாரம்பரிய நிதி கணக்காய்விற்கு மேலதிகமாக முறைமை பகுப்பாய்வு, செயலாற்றல் மதிப்பீடுகள் மற்றும் விசேட புலனாய்வுகளை உள்ளக கணக்காய்வாளர் கருத்தில் கொள்ள வேண்டும். அதன் பிரகாரம், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு 35 கணக்காய்வு பணிகளை இனங்கண்டு திட்டமிட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான முக்கிய இடர் பகுதிகளை கணக்காய்வு பணிகள் உள்ளடக்கியிருக்கவில்லை.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 06/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு காலாண்டுக்கு ஒரு முறையாவது பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இரண்டாவது காலாண்டில் 16 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதில், நான்காவது காலாண்டில் 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

6. மனித வள முகாமைத்துவம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் 3,795 ஊழியர்களை மாவட்டச் செயலகம் பணிக்கமர்த்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 98 உத்தியோகத்தர்கள் அந்தந்த குடியிருப்புகளுக்கு அருகிலுள்ள சேவை நிலையத்திற்கு தொடர்ச்சியாக இடமாற்றம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் என்ற கொள்கை பொதுவாக பின்பற்றப்பட்ட போதிலும் 188 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் (வரிசை அமைச்சுக்களின் கீழ் இணைக்கப்பட்ட 54 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக) சரியான காரணமின்றி 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக உத்தியோகத்தர்களின் உரிய குடியிருப்புக்கு அருகிலுள்ள சேவை நிலையத்தில் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேலும், 5 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் 22

ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பணியாற்றி வருகின்றதுடன் 98 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் (வரிசை அமைச்சகங்களின் கீழ் இணைக்கப்பட்ட 43 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக) 9 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர்.

(இ) தொடர்ச்சியான இரண்டாவது இடமாற்றங்களில் 15 உத்தியோகத்தர்கள் நீண்ட தூரம் மற்றும் மிகவும் கஸ்ரப் பகுதிப் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஈ) 22 உத்தியோகத்தர்கள் ஐந்து வருடங்களுக்கும் மேலாக மிகவும் கஸ்ரப் பகுதியில் பணிக்கமர்த்தப்பட்டமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், கோறளைப்பற்று வடக்கு, வாகரை மற்றும் கோறளைப்பற்று தெற்கு, கிரண் ஆகிய மிகவும் கஸ்ரப் பகுதி பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக எந்தவொரு இடமாற்றமும் இன்றி 16 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், கோறளைப்பற்று வடக்கு, வாகரை மற்றும் கோறளைப்பற்று தெற்கு, கிரண் ஆகிய மிகவும் கஸ்ரப் பிரதேச செயலகங்களில் 06 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருகின்றனர்.

(உ) நிர்வாக முடிவுகளை எடுக்கும் அதிகாரிகள் தங்கள் தற்றுணிவு அதிகாரங்களை எந்தவித பாரபட்சமும் இன்றி பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான முறைமை உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். எனினும், ஆறு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 20 உத்தியோகத்தர்கள் முறையான இடமாற்றக் கொள்கை அல்லது நடைமுறையைப் பின்பற்றாமல் இடமாற்றம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 5 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னரே அவர்கள் மீண்டும் அருகிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

(ஊ) கோறளைப்பற்று வடக்கு, வாகரை மற்றும் கோறளைப்பற்று தெற்கு, கிரண் ஆகிய மிகவும் கஸ்ரப் பிரதேச செயலகங்களில் பல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 09 வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக கடமையாற்றி வருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அவர்களின் சொந்த குடியிருப்புக்களுக்கு அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் 10 ஆண்டுகளிற்கும் மேலாக சில உத்தியோகத்தர்கள் பணியாற்றி வருகின்றனர்.

எம்.பி.ஐ.எம். ரஷ்மி
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04 செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**0% - 74%**
கட்டிட மீள்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல்	99.98	-	-
புதிய கட்டிட நிர்மானம்	-	-	-
புதிய மாவட்டச் செயலக கட்டிட நிர்மானம்	-	-	49.30
தளபாடம் மற்றும் உபகரணம்	100	-	-
பொறி மற்றும் இயந்திரம்	99.98	-	-

அத்தியாயம் 05 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை சுட்டிகள்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டல்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை						
குறிக் கோள் இலக்கம்	இலக்கு / குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
				0 % - 49 %	50 %- 74 %	75 % - 100 %
1	அனைத்து இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுமுள்ள வறுமையை ஒழித்தல்	1.4 2030 களில், எல்லா ஆண்கள் மற்றும் பெண்களுக்கு, குறிப்பாக ஏழைகள் மற்றும் நலிவடைந்தோருக்கு பொருளாதார வளங்கள், அடிப்படை சேவைகளை பெற்றுக்கொள்ளுதல், காணி மற்றும் ஏனைய சொத்துக்கள் மீதான உரிமை மற்றும் அதிகாரம், பரம்பரைச் சொத்துக்கள், இயற்கை வளங்கள், பொருத்தமான புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறுநிதி அடங்கலான நிதிச்சேவைகள் ஆகியவற்றில் சமமான உரிமை இருப்பதை உறுதிப்படுத்தல்	1. வழங்கப்பட்ட காணி அனுமதி மற்றும் காணி மானியங்களின் எண்ணிக்கை 2. தீர்க்கப்பட்ட நிலப்பிரச்சனை-களின் எண்ணிக்கை			√
2	நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி, பசியை ஒழித்து, உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல்.	2.4 : 2030களில், உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிக்கவல்ல, சூழற்தொகுதிகளை பேணக்கூடிய, காலநிலைமாற்றங்கள், கடுமையான காலநிலை, வரட்சி, வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளும் தகவை வலுப்படுத்தக்கூடிய, நிலம் மற்றும் மண்ணின் தரத்தை அதிகரிக்கக்கூடிய நிலைபேறான உணவு உற்பத்தி முறைமைகளையும், நெகிழ்திறன்மிக்க விவசாய நடைமுறைகளையும் உறுதிப்படுத்தல்	1. குடும்பத்திற்கான உணவு பாதுகாப்பு உதவிகளின் எண்ணிக்கை 2. புதுப்பிக்கப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் மற்றும் கட்டப்பட்ட விவசாய கிணறுகள் போன்றவற்றின் எண்ணிக்கை			√

3	எல்லா வயதினருக்குமான ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்தல்	3.4 2030களில், தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் ஊடாக மன ஆரோக்கியத்தையும் நல்வாழ்க்கையையும் ஊக்குவிப்பதன் மூலமாக முதிர்ச்சிக்கு முன்னரான இறப்பை மூன்றில் ஒரு பகுதியாகக் குறைத்தல்	1. அலுவலர்கள் அல்லது பொதுமக்களுக்காக நடத்தப்படும் உடற்பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை 2. தொற்றாத நோய் தடுப்புக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 3. புதுப்பிக்கப்பட்ட பூங்காக்கள்/விளையாட்டு மைதானங்கள் / பாடசாலை விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை 4. கர்ப்பிணித் தாய்மார்கள் அல்லது குழந்தைகளுக்காக வழங்கப்பட்ட ஊட்டச்சத்து பொதிகளின் எண்ணிக்கை			√
6	நீர் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் கிடைக்கக் கூடிய-தாகவும் நிலைபேறானமுகாமை செய்யப்படுவதனையும் உறுதிப்படுத்தல்	6.1 2030களில், உலகளவில் பாதுகாப்பானதும் மற்றும் அனைவருக்கும் போதுமான குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்தல்	1. நலிவடைந்த குடும்பங்களுக்கு கட்டப்பட்ட கழிப்பறைகளின் எண்ணிக்கை 2. நலிவடைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நீர் வழங்கல் இணைப்புகளின் எண்ணிக்கை			√



7	அனைவராலும் பெறக்கூடிய நியாயமான நம்பகத்தன்மை கொண்ட, நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல்	7. டி 2030களில் , நவீன, நிலைபேறான சக்திவலு சேவைகளை அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் குறிப்பாக குறைந்தளவில் அபிவிருத்தியடைந்த நாடுகள், சிறிய தீவில் அபிவிருத்தியடைந்து வரும் மாநிலங்கள் மற்றும் நிலத்தால் சூழப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக அந்நாடுகளின் சம்பந்தப்பட்ட செயல் திட்டங்களுக்கு அமைவாக உள்கட்டமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் விரிவாக்கப்பட்ட வேண்டும்	1. அமைக்கப்பட்ட மின் உற்பத்தி - சூரிய சக்தி ஆற்றல் மையங்களின் எண்ணிக்கை. 2. அரசு அலுவலக மையங்களில் நிறுவப்பட்ட புதுப்பிக்கப்படக் கூடிய சூரிய சக்தி மின் பிறப்பாக்கிகளின் எண்ணிக்கை. 3. தேசிய மின் இணைப்பில் இருந்து மின் இணைப்பு பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை			√
8	கௌரவமான மற்றும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் வேலை வாய்ப்பினையும், எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினையும் முன்னிறுத்தல்	8.3 அபிவிருத்தி சம்பந்தமான கொள்கைகள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் அது ஒழுக்கமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன் தொழில் முனைவோர், ஆக்கத்திறன் மற்றும் கண்டுபிடிப்புக்கள் தொடர்பிலும் அத்துடன் ஒழுங்கு படுத்துதல் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல் அடங்கலாக இவற்றின் மூலம் நிதியியல் சேவைகளுக்குள் பிரவேசிக்க முடிகிறது	1. தொழில்முனைவோருக்காக நடத்தப்பட்ட தொழில்நுட்ப அமர்வுகளின் எண்ணிக்கை 2. நிறுவப்பட்ட சிறு நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை (SME)			√

9	உறுதியான உட்கட்டமைப்பினை கட்டியெழுப்புவதுடன் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான தொழில் மையமாக்கத்தினையும் புத்தாக்கத்தையும் வளர்த்தல்	9.1 தரம், நம்பகத்தன்மை, நிலையான மற்றும் நெகிழ்த்திறன்மிக்க உட்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்தவேண்டியுள்ளது டன் அவை பிராந்திய மற்றும் எல்லை தாண்டிய உள்கட்டமைப்பும் அடங்கலாக பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித நல்வாழ்க்கை சம்பந்தமாக அனைவருக்கும் அணுகக்கூடியதாகவும் இயலக்கூடியதாகவும் இருத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்	சுற்றுலா தலங்கள் மேம்படுத்தலுக்கான வசதிகளின் எண்ணிக்கை			√
11	உள்ளடக்கமான, பாதுகாப்பான, உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும், குடியிருப்புக்களை அமைத்தல்	11.1 : 2030களில், போதுமானளவு பாதுகாப்பு மற்றும் இயலக்கூடியதான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படைச்சேவைகள் மேம்படுத்தப்பட்ட சேரிகள் தொடர்பில் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும் 11.2 : 2030களில், பாதுகாப்பானதும், இயலக்கூடியதுமான நிலையான போக்குவரத்து முறைமைகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். வீதிப் பாதுகாப்பு, பொதுவாக பொதுப் போக்குவரத்தினை விரிவாக்குவதும், பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளிலுள்ள பெண்கள், பிள்ளைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் வயதான நபர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதும் அவசியம்	1. நலிவடைந்த குடும்பங்களுக்காக நிர்மானிக்கப்பட்ட /புனரமைக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1.நிர்மானிக்கப்பட்ட /புதுப்பிக்கப்பட்ட வீதிகள் கிலோ மீற்றரில் 2..நிர்மானிக்கப்பட்ட கிராமப்புற பாலங்களின் எண்ணிக்கை			√

16	நிலைபேறான அபிவிருத்திக்கு சமாதானமான மற்றும் உள்ளடக்கமான சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதியினை அணுகும் வசதியினை வழங்கல், அனைத்து மட்டங்களிலும் வினைத்திறன் மிக்க மற்றும் நம்பகத்தன்மை கொண்ட உள்ளடக்கமான நிறுவனங்களை கட்டியெழுப்பல	16.10 :தேசிய சட்டத்திற்கும், சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் அமைய பொதுமக்களுக்கு தகவல் கிடைப்பனவு மற்றும் பாதுகாப்பான அடிப்படைச் சுதந்திரங்கள் இருப்பதை உறுதி செய்தல் 16.6: வினைத்திறனான, பொறுப்பான மற்றும் வெளிப்படையான நிறுவனங்கள் அனைத்து மட்டங்களிலும் அமைக்கப்படுதல் .	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 1. நிதியாண்டு கணக்கறிக்கைகள் கணக்காய்வு நயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்பித்தல் 2. திறைசேரி மற்றும் தொடர்புடைய அலுவலகங்களிற்கு உரிய அறிக்கைகளை சமர்ப்பித்தல்			√

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

மாவட்டத்தில் காணப்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டியூடாக 2022 இல் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தி இலக்குகளில் கணிசமான அளவில் குறிப்பிட்ட நோக்கங்கள் எட்டப்பட்டன என்பதை இது பிரதிபலிக்கின்றது.

அத்தியாயம் 06 மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் / (அதிகப்படியான)
சிரேஷ்ட நிலை	51	51	00
மூன்றாம் நிலை	33	13	20
இரண்டாம் நிலை	928	1125	-197
ஆரம்ப நிலை	156	115	41
மொத்தம்	**1168**	**1304**	**-136**

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்திய மனித வளங்களின் மிகை அல்லது குறை எவ்வாறானது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுதல்

கிராம உத்தியோகத்தர்களுக்கான பதவியணிக்கான வெற்றிடம் 97 ஆகக் காணப்படுகின்றது. இது அவர்களுடைய கடமைகளை கிராம மட்டத்தில் வினைத்திறனாகச் செய்வதில் சிக்கல் காணப்படுகின்றது. எனினும் அருகிலுள்ள கிராம உத்தியோகத்தர்களை பதில் கடமையாற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன், புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கிராம உத்தியோகத்தர்களுடன் இணைந்து, மக்களுக்கு வினைத்திறனான சேவையினை வழங்குவதற்காக, கிரம உத்தியோகத்தர்களுக்கான அலுவ-லகத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவியணிக்கான வெற்றிடம் 30 ஆகக் காணப்படுகின்றது. இவ்வெற்றிடத்தினை ஈடுசெய்வதற்காக, புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களது கடமைகளைச் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் 9 ஆகக் காணப்படுகின்றது. அவர்களது கடமைகளை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வகுப்பு 1 உத்தியோகத்தர்களால் பதில் கடமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டதனால், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பதவியணி 338 ஆல் அதிகரித்துக்காணப்படுகின்றது. இந்நிலையில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. எனினும், சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், வேறுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கடமைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.3 மனித வள அபிவிருத்தி

ரூபா.000

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா'000) உள்நாட்டு வெளிநாட்டு	நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு	வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு
என்.எம்.ஜோஜினி அலுவலக தொர்பாடல் மற்றும் கடிதம் எழுதுவதுவது பற்றிய கருத்தரங்கு.	1	25.02.2022	7,750.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
கே.கருணாகரன் பொதுத்துறையில் சிறந்த தீர்மானம் எடுப்பதற்குரிய நுண்ணறிவுக் கருத்தரங்கு	1	11.02.2022	7,750.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
e-Procurement பயிற்சி நெறி பிரதம கணக்காளர், கணக்காளர்	2	25.03.2022	15,500.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
T.Suman (Eng.) பொறியியல் சேவை வருடாந்த சந்தா	1		6,792.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
புதிதாக உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி	284	02.03.2022 07.03.2022	153,020.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
Microft Azure funda-mendals Training Programme	22	25.01.2022	16,569.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
ஒப்பந்த வேலைகள் மேற்பார்வைக்கான பயிற்சிநெறி	60	26.03.2022	35,120.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
ICT பயிற்சி நெறி Net-work and System ad-ministration	1	05.03.2022	70,000.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
S.M.AL.Ameen உதவி பிரதேசெ செயலாளருக்கான முதுமானி பயிற்சி நெறி	1		75,000.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல
ITMIS பயிற்சி நெறி	115	08.11.2022 11.11.2022	112,499.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
T.Rudran 3வது தடைதாண்டல் பரீட்சைக் கட்டணம்	1		17,500.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
ITMIS பயிற்சி நெறி	115	08.11.2022 11.11.2022	255,641.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல
AMC பயிற்சி நெறி	60	06.12.2022 10.12.2022	53,300.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
14 பிரதேச செயலகங்களின் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி		01.01.2022 31.12.2022	258,940.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
மொத்தம்			**1,085,381.00**		

அத்தியாயம் 07 இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்படைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமாற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
01	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	-		
1.6	ஏனையவை	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.4450-**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பரா-மரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.10	பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
03.	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		

3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்பட்டது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
04	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிததல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
05	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
06	**உள்ளக்க் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) டி.எம்.ஏ/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்பட-டயில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
6.4	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			

7.1	டி.எம்.ஏ/1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல்அலுவ-லகத்திற்குஅனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
8.5	நி.பி.772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பரா-மரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி103,104,109 மற்றும்110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்த பதிவு பத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		

10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவை-களைத் தீர்த்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவ-ிடல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
11.2	நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்குள் இணங்குதல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு அறிக்கை புதுப்பித்தல் மற்றும் பரா-மரித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்த மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
15	**வருமானக் கணக்கு**			

15.1	விதிகளின் படி சேர்க்கப்பட்ட வரு-மானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேர-டியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பரா-மரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகள் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ..டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நி-றுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்ததல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதீப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
19	**மனித வள திட்டத்தினை தயாரித்தல்**			

19.1	2018.01.21 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வள திட்டத்தினை தயாரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கு குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கை-யெழுத்திடப்பட்டுள்ள்து.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		